செந்தமிழ்

தொகுதி 78 மார்ச் '84 பகுதி 1

T 4530

Acc. 23449

மதுரைத் தமிழ்ச் சங்கம்
* THE MADURA TAMIL SANGAM *

—உள்ளே—

வரலாற்றில் திரு. வி. க.
அறிவியல் தமிழ்
தலபுராணத் தோற்றம்
பாவையும் பையனும்
அறிவியல் வினா விடை

ஆசிரியர் : டி. பி. எம். பெரியசுவாமி

T4530

செந்தமிழ்

தொகுதி 78 மார்ச் 1984 பகுதி-1

உள்ளுரை

Acc. 23449

எண்	பொருள்	பக்கம்
1.	வரலாற்றில் திரு.வி.க. டாக்டர் நிர்மலா மோகன்	1
2	அறிவியல் தமிழ் — புதிய சொற்கள் டாக்டர் மெய்யப்பன்	9
3.	தலபுராணத் தோற்றம் டாக்டர் சு. வேங்கடராமன்	16
4	பாவையும் பையனும் பழனி. அரங்கசாமி	25
5.	மு. வரதராசன் நாவல்களில் சொற்போர்முறை திருமதி மா. தையல்நாயகி	28
6.	அறிவியல் வினாவிடை — அசாமி	3[illegible]
7.	தொலைக் காட்சியில் நேதாஜி போஸ்	34
8.	போரின் விளைவுகள்	36
9.	நூல் மதிப்புரை	37
10.	மகா வித்வான் தண்டபாணி தேசிகர் வரலாறு	42
11.	நாவலர் பண்டித ந.மு. வேங்கடசாமி நாட்டார் வாழ்க்கைக் குறிப்பு	

அறிவிப்பு

மதுரைத் தமிழ்ச் சங்கச் செயலாளரும், 'செந்தமிழ்' ஆசிரியரும், சங்க வளர்ச்சிக்கு உற்ற துணையாக இருந்தவரும், தஞ்சை தமிழ்ப் பல்கலைக் கழக ஆட்சிக் குழு உறுப்பினரும், கமுதி கலைக் கல்லூரித் தாளாளரும் ஆகிய

திரு. டி. பி. எம். பெரியசுவாமி அவர்கள்

1984-ஆம் ஆண்டு மே-திங்கள் நான்காம் நாள் மாலை 6-மணியளவில் இயற்கை எய்தினார்கள் என்பதை ஆழ்த்த வருத்தத்துடன் அறிவித்துக் கொள்கிறோம்.

— தமிழ்ச்சங்க ஆட்சிக் குழுவினர்

ஆசிரியர் பக்கம்

புதிய தமிழ் ஆண்டு பிறக்கும் இந்நல்வேளையில் செந்தமிழ் உங்களைத் தேடி வருகிறது. செந்தமிழை விரும்பிப் பயிலும் அன்பர்களின் எண்ணிக்கையும் சிறிது சிறிதாகக் கூடிவருகிறது என்பது மகிழ்ச்சி யளிக்கும் செய்தி. அண்மையில் சென்னையில் நிகழ்ந்த மணிக்கொடி காலக் கருத்தரங்கில் செய்திப்பத்திரிகை யினைப் பற்றி கட்டுரை படித்த அன்பர் தமிழ்த் தொண்டில் தொடர்ந்து நடக்கும் மாத இதழ் என்று செந்தமிழைப் பாராட்டியுள்ளார். குறையிருந்தால் எழுதுங்கள். பாராட்டுதற்குரிய இயல்புகள் காணப் படின், பிறரையும் செந்தமிழைப் படிக்கத் தூண்டுங்கள். இதுவே எமது வேண்டுகோள்.

தலபுராணம் பற்றிய கட்டுரையும், மொழி பெயர்ப்புக்கவிதையும் மகாவித்வான், சா. தண்டபாணி தேசிகர் அவர்களின் வாழ்க்கை வரலாறும் இவ்விதழில் வெளிவருகின்றன. நூல் மதிப்புரைகளும் பிற செய்தி களும் வழக்கம்போல் இடம் பெறுகின்றன.

வரலாற்றில் திரு. வி.க.

—டாக்டர் நிர்மலா மோகன்

பொதுச் சொத்து

"இத்துயர்கொள் தமிழ்நாட்டில் எனைமகிழச்
செய்தனவாய் இருப்ப வற்றுள்
முத்தமிழ்வாய் உழைப்பாளிக்கு உழைக்கும்தோள்
அன்புள்ளம், தமிழ் எழுத்தை
வித்திஉயிர் விளைக்கும்விரல், தமிழருக்கோர்
தீமையெனில் விரைந்தோடும்கால்
இத்தனைகொள் கலியாண சுந்தரனார்
என்றபொதுச் சொத்தும் ஒன்றே.

எனப் பாவேந்தர் பாரதிதாசனால் நெஞ்சாரப் பாராட்டப் பெற்றவர் தமிழ்த்தென்றல் திரு.வி. கலியாணசுந்தரனார். 'வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து, வான்புகழ் கொண்ட தமிழ்நாடு' எனக் கவியரசர் பாரதியார், வள்ளுவரை உலகினுக்கே உரிமையாக்கி மகிழ்ந்ததைப் போல், பாவேந்தர் பாரதிதாசன் திரு.வி.க. வைத் தமிழ்நாட்டிற்கே உரிய பொதுச் சொத்தாகக் கருதி மகிழ்ந்தார்; அவரை 'கூனிக் கிடந்த தமிழர் விழிக்க வந்த முத்தமிழ்த் தேனருவி' எனப் பாடி இன்புற்றார்.

'தமிழ்த் தென்றல்', 'தமிழ்ப் பெரியார்', 'தமிழ் முனிவர்', 'தமிழ்த் தொண்டர்', 'தமிழ்த் தந்தை' எனப் பல்வேறு சிறப்புப் பெயர்களால் தமிழ் கூறு நல்லுலகால் பற்றோடும் பாசத்தோடும் அழைக்கப்படுபவர் திரு.வி.க. இந்திய வரலாற்றில் இடம் பெறுகின்ற அத்தமிழ்ப் பெரியார் நாட்டு விடுதலை இயக்கத்திற்கு ஆற்றிய தொண்டு என்றும் நினைவு கூரத் தக்கது.

அரசியல் தொண்டு

இலக்கிய உலகில் ஒரு வானம்பாடியைப் போல் உரிமையோடு உலவிக் கொண்டிருந்த திரு.வி.க., அரசியல் உலகினுள் அடியெடுத்து வைத்த வரலாறு குறிப்பிடத்தக்கதாகும். 1910 ஆம் ஆண்டில் ஆயிரம் விளக்கு வெஸ்லியன் மிஷன் பள்ளியில் ஆசிரிய-

ராகச் சேர்ந்து ஆறு ஆண்டுகள் பணியாற்றினார். பின்னர் 1916-ஆண்டு வெஸ்லி கல்லூரியில் தலைமைத் தமிழாசிரியராக பதவி ஏற்று ஒன்றரை ஆண்டு தமிழ்த் தொண்டாற்றினார். 1917-ஆம் ஆண்டின் பிற்பகுதியில் - அதாவது முப்பத்து நான்காம் வயதில் - திரு வி க. வின் வாழ்க்கையில் ஒரு பெரும் மாறுதல் நிகழ்ந்தது. சுய ஆட்சிக் கிளர்ச்சி அவரை ஆட்கொண்டது; அரவிந்த்கோஷ் நடத்திய 'பந்தே மாதரம்' பத்திரிகையும், விபின சந்திர பாலர், பால கங்காதர திலகர் லாலா லஜபதிராய், அன்னி பெஸண்ட் அம்மையார் முதலான நாட்டுத் தலைவர்களின் எழுச்சி மிக்க பேச்சுக்களும் சுப்புராய காமத், ஜஸ்டிஸ் சதாசிவ ஐயர் போன்ற சமுதாயத் தொண்டர்களின் தொடர்பும் அவரை மெல்ல மெல்ல அரசியல் உலகிற்கு ஈர்த்தன; ஆசிரியப் பணியை விடுத்து, நாட்டு விடுதலைக்குத் தொண்டாற்ற வேண்டும் என்ற வேட்கை காலப்-போக்கில் அவருள் கிளர்ந்து எழுந்தது. அதன் விளைவாகத் திரு வி க. 7-12-1917 - இல் 'தேசபக்தன்' என்னும் நாளேட்டின் ஆசிரியரானார். தமிழ் நாட்டினர் அடைந்த வியப்புக்கு அளவே இல்லை. தமிழாசிரியர் ஒருவர் அரசியல் பத்திரிகைக்கு ஆசிரிய-ரானார் என்பது அக்காலத்திய சூழ்நிலையில் ஒரு புதுமையான செய்தியாகும்.

''எலிஎனப் புலவர் வீட்டில்
இருக்கையில், சுந்தரர்தாம்
புலிஎன வெளியிற் போந்தார்
முதன்முதல் அரசியற்கே''

எனத் திரு வி.க. வின் அரசியல் வருகை பற்றிப் பாடுகிறார் பாவேந்தன் பாரதிதாசன்.

'தேசபக்தன்' இதழ்கள் வெளிவரத் தொடங்கியதும் திரு. வி.க வின் துணிச்சலும், நாட்டுப்பற்றும் அரசியல் நுட்பமும், எளிய தமிழ் நடையும் கண்டு தமிழ்நாடே வியந்து பாராட்டத் தொடங்-யது. அரசியல் கருத்துக்களைத் தமிழில் பேச முடியாது-என்று பலர் எண்ணிக் கொண்டிருந்த அந்தக் காலத்தில், மிகவும் சிக்-கலான அரசியல் நடப்புகளையெல்லாம் 'தேசபக்த'னில் தூய தமிழில், ஆர்வத்தோடும் உணர்ச்சியோடும் திரு. வி.க எழுதினார். சான்றாக, 4.1.1918 'தேசபக்தன்' இதழில் 'தமிழும் சுய ஆட்சியும், என்னும் தலைப்பில் திரு. வி. க. எழுதிய ஆசிரியக் கட்டுரையி-லிருந்து (Editorial) ஒரு பகுதியைக் காண்போம்.

''தமிழ் நாட்டைத் திருத்தத் தமிழ் நூல்களே சாலும். இப்பொழுது திருவள்ளுவரைப் படிப்பவர் யார்? தொல்காப்பியத்தைத் தொடுபவர் யார்? புறநானூற்றைப் போற்றுவோர் யார்? சிலப்பதிகாரத்தைச் சிந்திப்பவர் யார்? மணிமேகலையை மதிப்போர் யார்? பத்துப்பாட்டைப் படிப்போர் யார்? பலரில்லையே. இந்நூல்களின் பெயர்களைக் கேட்டுள்ளவர் ஆயிரத்தில் ஒருவரோ? இருவரோ? அறிகிலேம். அரும்பெரும் நூற்கருத்துக்கள் அழிகின்றனவே. தமிழர் வழக்க ஒழுக்கங்கள் அருகுகின்றனவே. இப்பொழுது தமிழர்கள் செய்ய வேண்டிய கடமையென்னை? தமிழ்மக்கள் சுய ஆட்சி பெற முயல்வது தமிழ்த்தாய்க்கு உயிர் கொடுப்பதாகும். சுருங்கச் சொல்லல், விளங்க வைத்தல் என்னும் உண்மையை உணர்ந்த தமிழ் மக்களுக்குப் பொருளை விரித்துரைக்க வேண்டுவது அநாவசியம். தமிழ்ச் சகோதரர்களே! விரைவில் சுய ஆட்சி பெற முயற்சி செய்வீர்களாக!''

''இந்தியாவின் சுதந்திர சரித்திரத்தில் தேசபக்தனுக்கு நிரந்தரமான ஒரு ஸ்தானம் உண்டு இந்தப் பத்திரிகை தான் தமிழ்நாட்டில் தேசீய உணர்ச்சியை நேரிய முறையில், தமிழ்ப்பண்போடு கலந்து ஊட்டியது'' என்று அறிஞர் திரு. வெ. சாமிநாத சர்மா 'நான் கண்ட நால்வர்' எனும் தமது நூலில் கூறியுள்ளார். 'தேசபக்தன்' ஆசிரியப் பதவியில் திரு.வி.க பணிபுரிந்தது இரண்டரை ஆண்டுக் காலமே. எனினும் இந்தக் குறுகிய காலத்திலேயே அவர் செய்து காட்டிய சாதனை போற்றத்தக்காகும். அப்பத்திரிகை வாயிலாக அவர் செய்த கிளர்ச்சியும் ஊட்டிய எழுச்சியும் குறிப்பிடத்தக்கன. தமிழரை அந்நிய மோகத்தினின்றும் விடுவித்த அப்பத்திரிகை தொழிலாளர் இயக்கம் தோன்றுவதற்கும் தேசபக்தியின் வளர்ச்சிக்கும் முனைப்போடு பாடுபட்டது ''அந்நாளில் நாட்டுமொழிப் பத்திரிகைகளில் அயல்மொழி நாற்றம் வீசும். அரசியல் குறியீடுகள் அந்நியத்தில் அப்படியே பொறிக்கப்படும். 'தேசபக்தன்' பத்திரிகையுலகில் புரட்சி செய்தான். எப்படிச் செய்தான்? புரட்சி நிகழ்ந்ததென்று பத்திரிகை உலகுக்கே தெரியாது. புரட்சிகளைத் 'தேசபக்த'னில் காணலாம். 'தேசபக்தன்' தமிழாக்கிய அரசியல் சொற்களும், சொற்றொடர்களும், குறியீடுகளும் இப்பொழுது பத்திரிகைகளிலும், மேடைகளிலும், பிற இடங்களிலும் ஏற்றமுற்று அரசு புரிதல் வெள்ளிடைமலை எனத் திரு.வி.க.வே தம் 'வாழ்க்கைக் குறிப்பு'களில்

'தேசபக்தன்' பத்திரிகை உலகில் நிகழ்த்திய புரட்சியினைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

அக்காலத்தில் சட்ட மன்றத்தில் ஆங்கிலமே பேசப்படும். தமிழர்க்கும் தமிழ் நினைப்பு வருதல் அருமை. ஒரு முறை சேலம் பி.மு. நரசிம்ம ஐயர் சட்ட மன்றத்தில் தமிழில் பேசினார். அது பற்றி எப்பத்திரிகையும் குறிப்பு எழுதவில்லை; 'தேசபக்தன் மட்டுமே நரசிம்ம ஐயரைப் பாராட்டி ஒரு குறிப்பு எழுதியது.

திரு வி க. 'தேசபக்தன்' இதழை இரவு பகலாகக் கண்விழித்து ஒரு குழந்தையை வளர்ப்பதுபோல் கண்ணும் கருத்துமாக வளர்த்து வந்தார். தமது இயல்புக்கு மாறுபட்ட செயல்கள் 'தேசபக்தன்' இதழின் காரியக் கூடத்தில நிகழ்ந்தபோது. திரு.வி.க. தேசபக்த'னை விட்டு விலகி 'நவசக்தி' என்னும புதிய வார இதழினை 22. 10. 1920-ல் தொடங்கினார். ஏறக்குறைய இருபது ஆண்டுகள் 'நவசக்தி'யின் ஆசிரியராகவே இருந்து தொண்டாற்றினார்.

திரு வி க. வின் 'நவசக்தி' பத்திரிகை அரசியலுடன் வேறு பல துறைகளிலும் இறங்கிப் பணியாற்றியது. சமூக சீர்திருத்தம், பெண் நலன், மொழிச் சிறப்பு, கலையாக்கம், சமதர்ம சன்மார்க்கம் முதலான துறைகளைக் சார்ந்த பல்வேறு ஆசிரியக் கட்டுரைகளைத் திரு.வி.க. 'நவசக்தி'யில் எழுதினார். சான்றாக 4. 3. 1921 'நவசக்தி' இதழில் 'பெண்மக்கள் நிலை' என்னும் தலைப்பில் திரு.வி.க. எழுதியுள்ள ஆசிரியக் கட்டுரையிலிருந்து ஒரு பகுதியைக் காண்போம்: ''இந்தியப் பெண்மக்கள் பிள்ளைகளுக்குத் தாய்மார்களாக இருக்கவும், நாயகன்மார்களுக்கு நாயகிமார்களாக இருக்கவும், அடுப்பூதவும் பயின்றிருக்கிறார்கள். அவர்கள் உலகத்திலுள்ள இயற்கை இன்பங்களையும், வேறு பல இன்பங்களையும் நுகர்கின்றார்களில்லை. அவர்கள் அறிவு, பானை சட்டி அளவாகவீட்டளவாகக் கட்டுப்பட்டுக் கிடக்கிறது. அவர்கள் அறிவை வியாபகப்படுத்தாது, கட்டுப்படுத்துவது பெரும்பாவம்.'' இப்பகுதி, பெண்மக்களின் நலத்திலும் முன்னேற்றத்திலும் திரு.வி.க. கொண்டிருந்த ஆழமான ஈடுபாட்டைத் தெள்ளிதின் புலப்படுத்துவதாகும்.

உறங்கிக் கிடந்த தேசத்தைத் தட்டி எழுப்புவதில் திரு.வி.க தோற்றுவித்த 'தேசபக்த'னும், 'நவசக்தி'யும் ஆற்றிய பங்கு வரலாற்றில் பொன்னெழுத்துக்களில் பொறிக்கத்தக்தாகும்.

தொழிலாளர் தொண்டு

திரு.வி.க. வின் வாழ்க்கையைப் பெரிதும் கவர்ந்தது தொழிலாளர் இயக்கம். அவ்வியக்கம் அவரது ஊண் உறக்கத்தைக் குலைத்தது; அவரை மெலிவித்தது. சுருங்கக் கூறின், அஃது அவரை ஒரு யோகி ஆக்கியது.

1918-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் **27**-ஆம் நாளன்று இந்தியாவிலேயே முதன்முதலாகத் தொடங்கப்பெற்ற சென்னைத் தொழிலாளர் சங்கத்தின் உதவித் தலைவராகத் திரு வி.க. தேர்ந்தெடுக்கப்பட்டார்; பின்னர் 1920-ஆம் ஆண்டில் அவர் சென்னை மத்தியத் தொழிலாளர் சங்கத்தின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். கலகங்களும், குழப்பங்களும் நிலவிய காலத்திலும்-கதவடைப்புக்களும் வேலை நிறுத்தங்களும் நிலவிய காலத்திலும்-திரு.வி.க. ஒரு துணையும் இல்லாமல்-கையில் கத்தியோ துப்பாக்கியோ இல்லாமல்-நடமாடிக் கொண்டிருந்தார்; சாதி மதங்களைக் கடந்து நின்று தொழிலாளர் உலகிற்கு 25 ஆண்டுகள் விளம்பரமற்ற தொண்டாற்றினார் தொழிலாளரிடையில் திரு.வி.க ஒரு தலைவராக இருந்து தொண்டாற்றவில்லை; ஒரு தொண்டராக தொழிலாளியாக இருந்து தொண்டாற்றினார்.

தொழிலாளர் எழுச்சியைத் திரு.வி.க 'நவசக்தி' என்று சொல்வது வழக்கம். 'தேசபக்த'னை விடுத்து ஒரு வாரப்பத்திரிகை தொடங்கும் அவசியம் நேர்ந்தபோது, அப்பத்திரிகைக்கு அவர் தொழிலாளர் எழுச்சியையொட்டிக் குறித்து வந்த 'நவசக்தி' என்னும் பெயரையே அணிவித்தார். இந்நிகழ்ச்சி தொழிலாளர் பால் திரு.வி.க.வுக்கு இருந்த பேரன்பையும் புலப்படுத்துவதாகும்.

''உலகம் சில காலம் குருமார் அடிவருடி நின்றது; சில காலம் மன்னர் வாள்வழி நடைபெற்றது; இப்பொழுது வாணிபருக்கு இரையாகி வருகிறது; இனித் தொழிலாளர் வயப்பட்டு நலம் பெறப் போகிறது'' என 1920-ஆம் ஆண்டிலேயே தொழிலாளர் எழுச்சிக்குக் கட்டியம் கூறியவர் திரு.வி.க. ஆவார். தொழிலா-

ளருக்குப் பொருளாதார உணர்ச்சி ஊட்டவேண்டும் என்பது அவரது நீண்ட கால வேட்கை. சம்பள உயர்வும் வேலை நேரச் சுருககமும மட்டும் தொழிலாளர்க்கு விடுதலை நல்கா என்றும், தொழிற்சா-லைகளின் பொருளாதாரத்தில் தொழிலாளர்க்கும் உரிமை இருத்தல் வேண்டும் என்றும், இலாபத்தில் குறைந்தது இரண்டனாவாவது தொழிலாளர்க்கென்று ஒதுக்கப்படல் வேண்டும என்றும் அவர் தொழிற்சங்கங்களில் அவ்வப்போது நிகழ்ந்த கூட்டங்களில் பேசி வந்தார். அவரது எழுச்சி மிக்க பேச்சுக்களால் தொழிலாளர் இயக்கம் ஆக்கம் பெற்றது; ஆங்காங்கே தொழிற்சங்கங்கள் தோன்றின.

காங்கிரஸ் தொண்டு

''காங்கிரஸ் விதை என்னுள் இளமையிலேயே விழுந்தது. விதை விழுந்ததில் வியப்பில்லை. அது பட்டுப் போகாமல் எத்த னையோ தூறுகளைக்கடந்து வளர்ந்ததே வியப்பு'' என்பது திரு வி.க.வின் வாழ்க்கைக் குறிப்பு

1917-ஆம் ஆண்டின் இறுதியில் திரு வி.க. காங்கிரஸ் தொண்டினை வெளிப்படையாகச் செய்ய முற்பட்டார். தொடக்கத் தில் காங்கிரஸ் சார்பில் கூடும் கூட்டங்களில் ஜஸ்டிஸ் கட்சியின் வகுப்புவாதக் கொள்கையை மறுப்பதே அவரது தொண்டாக விளங்-கியது. பின்னாளில், அன்னிபெசண்ட் அம்மையார், காந்தியடிகள், பாலகங்காதர திலகர் முதலான காங்கிரஸ் தலைவர்களை அடிக் கடி கண்டு உறவாடும் பேறு திரு வி.க.வுக்கு வாய்த்தது; காங் கிரஸ் தலைவர்கள் பேசிய கூட்டங்களிலே அவர் மொழி பெயர்ப் பாளராகத் தொண்டாற்றினார். நகர சபை சட்டசபைத்தேர்தல் நேரங்களில் காங்கிரஸ் கட்சியின் வெற்றிக்குத் திரு.வி.க. ஆற்றிய தொண்டு குறிப்பிடத்தக்கதாக இருந்தது. அவர் தலைமையில் நடந்தேறிய அரசியல் மாநாடுகள் பலவாகும். காங்கிரஸில் பிளவு ஏற்பட்டு விடக்கூடாது என்பதில் திரு.வி.க. கண்ணும் கருத்துமாக இருந்தார்; தமிழ்நாட்டு காங்கிரஸின் அமைப்பினை தூய்மை செய்ய அவர் அரும்பாடுபட்டார். காங்கிரஸ் பணியின் போது திரு.வி.க எத்தனையோ வசை மொழிகளைச் சந்தித்தார்; கருத்து வேறுபாடுகளைக் கண்டார். ஆனால் எல்லாவற்றையும் நெஞ்சில் உரத்தோடும், நேர்மைத் திறத்தோடும் தாங்கிக் கொண்டார். 1926 - ஆம் ஆண்டின் இறுதியில், தம் மனச் சான்றுக்கு ஒவ்வாத செயல் நிகழ்ந்தபோது, திரு. வி. க காங்கிரஸ் கட்சியின் காரியக் கூட்டத்தினின்றும் விலகினார்; சாதா

ரணக் காங்கிரஸ் உறுப்பினராய் இருந்து காலங்கழிக்க முடிவு செய்தார். ''காங்கிரஸ் பணிக்கு எப்பொழுதும் யான் சித்தமாயிப்பது எனது மதமாகிறது. காங்கிரஸ் என் குருதியில் ஒன்றியது. எனக்கு நாடே காங்கிரஸாகத் தோன்றுகிறது, காங்கிரஸ் அமைப்பு இந்திய நாட்டுப் பொருட்செல்வம்; வீரச்செல்வப்; கலைச் செல்வம். ,காங்கிரஸ் நிர்வாகத்தில் சிலர் வருவர்; போவர், அவரை யான் கருத்தில் கொள்வதில்லை; என் கருத்தில் காங்கிரஸே நிற்கும்'' என்பது திரு வி. க. கூற்று. ஆண்டாண்டுக் காலமாக அரசியல் உலகில் இருந்த போதும் திரு. வி. க, விடம் ஆழமான இராஜதந்திரமோ பதவிமோகமோ காணப்படவில்லை; கட்சி அரசியலின் சிறுமையும், கயமையும், கொடுமையும் காணப்படவில்லை. ஒரு முறை சத்திய மூர்த்தி குறிப்பிட்டது போல். திரு, வி. க கடைசி வரை காங்கிரஸ் கட்சியின் தங்கமாகவே விளங்கினார்

1919-ஆம் ஆண்டின் தொடக்கத்தில் திரு. வி க அரக்கோணத்தில் காந்தியடிகளைச் சந்தித்தார்; தலைவர் விஜயராகவாச்சாரியாரிடமிருந்து வாங்கி வந்த கடிதத்தை அடிகளிடம் கொடுத்தார். கடிதத்தைப் படித்த மகாத்மா, ''தேசபக்தன் எம்மொழிப் பத்திரிகை?'' என்று வினவினார். 'தமிழ்ப் பத்திரிகை'' என்றார் திரு. வி. க ''நீங்கள் பட்டதாரியா?'' என்று இரண்டாவது கேள்வி அடிகளிடமிருந்து பிறந்தது. அதற்கு, ''யான் பட்டதாரி அல்லன்; மெற்றிகுலேஷன் வரை ஆங்கிலம் பயின்றவன்; தமிழாசிரியனாய் இருந்தவன். எனது ஆங்கில அறிவு மொழிபெயர்ப்பளவில் பயன் பட்டு வருகிறது'' என்று பதில் கூறினார். திரு. வி. க. உடனே ''என் பேச்சை மொழிபெயர்ப்பீரா?'' என்று கேட்டார் மகாத்மா. ''தொழிலாளர் சார்பில் கூடும் கூட்டங்களில் யானே மொழிபெயர்ப்பாளனாக இருப்பேன். மற்றக் கூட்டங்களில் எப்படியோ?'' என்றார் திரு.வி.க. ''இனி நீங்களே என் மொழிபெயர்ப்பாளர்'' என்று அடிகள் அருளினார். அது முதல் திரு. வி. க. வைக் காண நேரும் போதெல்லாம் காந்தியடிகள் ''மொழிபெயர்ப்பாளரே'' என்று அழைப்பது வழக்கமாயிற்று. இந்நிகழ்ச்சி நடந்த சில ஆண்டுகளுக்குப் பிறகு, சென்னையில் ஒரு முறை அடிகளைத் திரு. வி. க. காண நேர்ந்ததாம். அப்பொழுதும் அடிகள், 'நீங்கள் மொழிபெயர்ப்பாளர் அல்லவா?' என்று கேட்டு நகைத்தாராம்.

திரு.வி.க. காந்தியத்தில் கொண்டிருந்த ஈடுபாடு, 'மனித வாழ்க்கையும் காந்தியடிகளும்' என்னும் நூலாக வெளிவந்தது. 'என்னுடைய நூல்களில் முதல் முதல் படிக்கத்தக்கது மனித வாழ்க-

கையும் காந்தியடிகளும்' என்பது' என அவரே அந்நூலைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

கருத்து மாறுபாட்டின் காரணமாகப் பிணங்கும் வழக்கம் திரு.வி.க.விடம் காணப்படவில்லை; மன வேறுபாடுகளைக் கடந்து நட்பு பாராட்டும் உயர்ந்த பண்பு அவரிடம் குடிகொண்டிருந்தது. எவ்வளவோ கருத்து வேற்றுமைகள் இருந்தாலும், ஈ.வே.ரா.வை 'வைக்கம் வீரர்' என்று முதல் முதலாக அழைத்தவர் திரு.வி.க. அவர்களே. ஈ,வே.ரா. வின் அருமை மனைவியார் நாகம்மாளின் உருவப்படத்தையும் திறந்து வைத்தவர் திரு.வி.க. என்பது நினைவு கூரத்தக்கதாகும்.

தமிழக அரசியலில் சுய மரியாதை இயக்கம் தோன்றுவதற்கு வித்திட்ட பெருமை திரு.வி.க.வுக்கும் உண்டு. ''நண்பர் நாயக்கர் முயற்சியும், எனது தலைமைக் கூட்டுறவும் ஒன்றிய சன்மார்க்க மகாநாட்டின் பயனாகச் சுயமரியாதை இயக்கம் என்னும் குழவி பிறந்தமையால், அதற்குத் தந்தை நாயக்கர் என்றும், தாய் யான் என்றும், அக்குழவி தந்தை வழி வளர்ந்து வருகிறது என்றும் யான் விளையாட்டாகச் சொல்வது வழக்கம்'' என்று அவரது வாழ்க்கைக்குறிப்புகளில் வரும் கூற்றால் இதனை அறியலாம்.

முடிவுரை

தெளிந்த அறிஞராக, தேசத்தைத் தட்டி எழுப்பிய இதழாசிரியராக, நாநலம் சிறந்த நாவலர் கோமானாக பெண்ணின் பெருமை பேசிய வீரராக, உரைநடைச் செல்வராக செழுந்தமிழ்ப் பெரியாராக, தென்றலாக, முனிவராக, செந்நாப் புலவராக, தொழிலாளர் அன்னையாக விளங்கிய திரு.வி.க. இந்திய வரலாற்றிலும் பதித்துள்ள சுவடு ஆழமானது; அழுத்தமானது.

''என்கடன் பணிசெய்தல் என்பதே எண்ணியெண்ணி,
நாடெலாம் வாழவே நாளெலாம் தன்சுகம்
நாடாது பாடுபடுவோன்
வீடெலாம் தமிழ்மக்கள் கலியாண சுந்தரம்
வெற்றி கொண்டாட வேண்டும்''

என்னும் நாமக்கல் கவிஞரின் செம்மொழியை ஏற்றுச் செயற்படுவோமாக!

அறிவியல் தமிழ் – புதிய சொற்கள்

டாக்டர் மெய்யப்பன்
மன்னர் சரபோஜி அரசுக் கல்லூரி
தஞ்சாவூர்

அறிவியலின் வளர்ச்சியே ஒரு நாட்டின் நாகரிகம் மற்றும் பொருளாதார வளர்ச்சியை மதிப்பிடும் ஓர் அளவு கோல் என்று அறிஞர்கள் கூறுகின்றார்கள். இது நூற்றுக்கு நூறு உண்மை என்பது சின்னஞ் சிறிய ஜப்பான் நாட்டின் முன்னேற்றத்தைப் பார்த்தாலே விளங்கும். அறிவியல் வளர்ச்சியின் உச்சியிலே இருந்து கொண்டு பற்பல சாதனைகளை சப்பானியர்கள் படைத்துக் கொண்டே போகின்றார்கள். முப் பரிமாணத் தொலைக் காட்சிப் பெட்டி (Three dimensional Television), சட்டைப் பைக்குள் அடக்கமாகும் நுண்வடிவத் தொலைக் காட்சிப் பெட்டி (packet Television), அதிவேகத்தில் செயல்படும் கணக்கிடும் பொறிகள் (computers), பயனுறு திறன் மிக்க கணக்கிடும் கருவிகள் (calculators), நிழற்படக் கருவிகள் (camera), கடினவேலைகளைத் தன்னிச்சையாகச் செய்ய வல்ல மின்னியந்திர மனிதர்கள் (Robots) - இப்படிப் பட்டியல் நீண்டு கொண்டே போகின்றது. சின்னக் குண்டூசி முதல் பெரிய கார்கள் வரையிலான அவர்களுடைய படைப்பில் புதுமை மட்டுமில்லை; துல்லியமான உயர் தொழில் நுட்பமும் உண்டு அதனால் உலகச் சந்தையிலே சப்பானியரின் பொருட்களுக்கு நல்ல மதிப்பு, தனியொருவர் மாத வருமானம் சப்பான் நாட்டிலே மிக அதிகமாகவும், நம் நாட்டிலே மிகக் குறைவாகவும் இருக்கிறது. அறிவியல் வளர்ச்சியில் காணப்படும் பெருத்த வேறுபாடு தான் இதற்குக் காரணம் ஆகும்.

அறிவியல் வளர்ச்சி இந்தியாவில் மிகவும் சிறப்புற அமையவில்லை என்பது வருந்துதற்குரியதாகும் இதற்குத் தலையாய காரணம் அறிவியலை நாம் வேற்று மொழியிலே பயிற்றுவிப்பதும், பயில்வதும் ஆகும். அறிவியல் என்றாலே ஆக்கப் பூர்வமான சிந்தனைகள் தாம். இச் சிந்தனைகள் தாய்மொழிக் கல்வி முறையிலே தான் திரண்டெழமுடியும் இதில் யாருக்கும்எள்ளளவும் கருத்து வேறுபாடு இருக்க முடியாது. வேற்று மொழியிலே அறிவியலைப் பயிற்றுவிக்கும் ஆசிரியர்கள் சுருங்கச் சொல்லி விளங்க வைக்கவும், அல்லது கருத்துக்களை முழுமையாகச் சொல்லி முடிக்கவும் இயலாமல்

சிரமப்படுகின்றார்கள். பயிலும் மாணவர்களோ, காரணங்களை அறிந்து கொள்ளாமல் வெறும் மனப்பாடம் செய்வதிலேயே தங்கள் திறமைகளை வீணடித்து விடுகின்றார்கள். இதனால் படிப்பை முடித்த பிறகும் அவர்களுடைய அறிவு நாட்டிற்குப் பயனில்லாது போகின்றது இந்த அடிப்படையில் தாய் மொழி வழிக் கல்வியே இந்திய மாணவர்களின் தனித் திறமைகளை வெளிக் கொணரும் என்று நம் நாட்டு கல்வியாளர்கள் மற்றும் உளவியல் வல்லுநர்களின் ஒருமித்த கருத்து தமிழ் நாட்டுப் பல்கலைக் கழகங்கள் 'தாய் மொழி வழிக்கல்வி' முறையை செயல்படுத்த முயற்சி செய்கின்றன என்றாலும் அது எந்த அளவு வெற்றி பெற்றுள்ளது என்று கூற இயலவில்லை

அறிவியல் அறிவு மாணவர்களின் இளம் பிராயத்திலிருந்தே புகுத்தப்படவேண்டும், எளிய நடையில், சாதாரண மக்களும் புரிந்து கொள்ளக்கூடிய வகையில், பல அறிவியல் நூற்கள் எழுதப் பெற்று, அவை இளம் மாணவர்களுக்கும் மலிவு விலையில் அல்லது இலவசமாகக் கிடைக்குமாறு செய்யவேண்டும். இயற்பியல் விளக்கம் முழுமையாக இருக்கவேண்டும்; கடினமான கணித மொழிகள், சமன்பாடுகள் முதலியன இல்லாதிருக்கவேண்டும்; முடிந்தவரை செயல் முறைகளையும், பண்புகளையும் ஒப்பிட்டு விவரிக்கவேண்டும். சான்றாக அணுவில் எலெக்ட்ரானின் சுற்றுப்பாதை மற்றும் தற்-சுழற்சி இயக்கங்களை பூமியோடு ஒப்பிடலாம்; என்பதையும், அணுக்கருவின் நுண்மத் தன்மையை ஒரு பெரிய விளையாட்டுப் பொட்டலில் ஒரு சின்னக் குண்டூசி போல என்றும் குறிப்பிட்டுச் சொல்லலாம் இப்படிச் சொல்வதால் ஆராயும் தன்மை தூண்டப் படுகின்றது. இதுவே மாணவர்களின் பிற்கால அறிவியல் வளர்ச்சிக்கு வித்தாகும். எனவே நாளைய அறிவியல் வளர்ச்சிக்கு கல்லூரிப் பாடப் புத்தகங்கள், ஆராய்ச்சி நூற்கள் கலைக் களஞ்சியங்கள் இவற்றை விட சாதாரண மக்களுக்குரிய அறிவியல் நூற்களே (popular science books) இன்றைய தேவையாகும். இந்நூற்-கள் மட்டுமே, நாம் உருவாக்கும் தமிழ்க் கலைச் சொற்களை மக்களிடையே அரங்கேற்றி மனதிலே பதிய வைக்கும், மேலும் இளம் மாணவர்களை அறிவியல் துறையில் விருப்பங் கொள்ள இது வழி வகுக்கும்.

அறிவியல் நூற்களுக்கு கலைச் சொல் அகராதியே மூலம், முழுமையான விஞ்ஞானத் தமிழ் சொல் அகராதி இல்லாத வரைக்-

கும், நல்ல பல நூற்களின் வெளியீடு என்பது ஈடேறாது. அறிவியலின் கலைச் சொற்களின் பட்டியலை சென்னை மற்றும் மதுரை பல்கலைக்கழகங்களும், தமிழ் நாட்டுப் பாட நூல் நிறுவனமும் வெளியிட்டுள்ளன. இவற்றுள் காணப்படும் சொற்களின் மொழியாக்கம் பொருத்தமாக அமைந்திலது. நாளுக்கு நாள் வளர்ந்து வரும் விஞ்ஞானத்தின் சொற்பெருக்கத்துக்கு ஏற்ப கலைச்சொல்லாக்கப் பட்டியல் வளர்ந்து வர வேண்டும்.

ஆங்கிலக் கட்டுரைகளைப் படிக்கும் போதும், தமிழ்க் கட்டுரைகளை எழுதும் போதும் அவ்வப்போது வெளிவருகின்ற புதிய அறிவியல் தமிழ் சொற்களை குறித்து வைத்துக் கொள்ள வேண்டும்.

ஏறக்குறைய 65 ஆண்டுகளாக அறிவியல் தமிழ்க் கலைச் சொல்லாக்க முயற்சிகள், ஆங்காங்கே உருவான பல அமைப்புக் களினாலும், தனிப்பட்ட பற்பல அறிஞர்களினாலும் மேற்கொள்ளப் பட்டு வந்துள்ளன. நீண்ட காலமாக அவ்வப்போது ஆக்கப்பட்ட கலைச் சொற்கள் தொகுக்கப்படாமலே சிதறிக்கிடந்தன. 1931 - ல் டி.வி சாம்பசிவம் பிள்ளை அவர்களின் அரிய முயற்சியினால் அறிவியல் கலைச் சொல் அகராதி உருப் பெற்றது. 1932 - ல் தமிழக அரசால் வெளியிடப்பட்டுபின்னர் 1947- ல் திருத்தப்பட்டு வெளிவந்த பட்டியல் ஓரளவு விரிவாகவும் வழக்கப் படுத்திக் கொள்ள எளிதாகவும் இருந்தது இற்றைக்காலத்தில் தமிழ் வழிக் கல்லூரிக் கல்வி உயர் கல்விக்கான பல தமிழ் நூல்களின் ஆக்கம், தமிழ் வளர்ச்சியை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டு இயங்கும் பல் கலைக் கழகம் போன்றவை படிப்படியான வளர்ச்சிக்கு மேற்கொள்ளப்பட்ட திட்டங்களாகும். அரும்பெரும் திட்டங்களைத் தீட்டுவதோடன்றி அவற்றைச் செம்மையாகச் செய்து முடிக்கவும் வேண்டும்.

1947 - ஆம் ஆண்டிற்குப் பிறகு அறிவியல் கலைச் சொல் பட்டியல் புதுமைப்படுத்தப் படவே இல்லை என்பது வருந்துதற்-

குரியதாகும். ஏனெனில் இது அறிவியல்த் தமிழ் வளர்ச்சியை புறக் கணிப்பதற்கு ஒப்பாகும். புதிய விதிகள், புதிய கண்டு பிடிப்புகள் என அறிவியல் வளர்ந்து வரும் இந்நாளில் கலைச் சொல் பட்டியலை உடனுக்குடன் திருத்திக் கொள்வது மிகவும் முக்கியமான தாகும்.

கலைச் சொல்லாக்கப் பணிக்கு ஒரு பொதுவான விதிமுறை இல்லாது போனால், ஒரே ஆங்கிலச் சொல்லுக்குப் பல தமிழ்ச் சொற்கள் ஆக்கப்பட்டு, ஆரம்ப காலத்தில் கருத்துக் குழப்பத்தை தோற்றுவித்து, அறிவியல் தமிழ் வளர்ச்சியைப் பாழ்படுத்தலாம். கலைச் சொல்லாக்க முயற்சிகளை மேற்கொள்ள விழைவோர் ஈண்டு சில நெறி முறைகளை நினைவிற் கொள்ள வேண்டும்.

(i) நடைமுறையில் இருந்து வரும் கலைச் சொல் பட்டியலைப் புதுமைப்படுத்த வேண்டும், ஏனெனில் சில சொற்கள் தவறான பொருளை மாணவர்கள் எண்ணும் படியாக உள்ளன. எடுத்துக் காட்டாக 'Loud Speaker' என்பதை 'ஒலிபெருக்கி' என்று பட்டியல் தெரிவிக்கின்றது. இதிலிருந்து 'Loud Speaker' ஒலிப் பெருக்கம் செய்யும் ஒரு சாதனம் என்று கருத இடமுண்டு. உண்மையில் இது ஒலிப் பெருக்கம் செய்வதில்லை; மின் அலையை ஒலியாக மாற்றுவதே இதன் செயல். [மின் அலைப் பெருக்கி (amplifer) யின் விளைவே ஒலிப்பெருக்கம்] எனவே Loud Speaker என்பதை மின் ஒலி மாற்றி என மொழியாக்கம் செய்வதே சரியானதாகும். இச் சொல்லே சாதனத்தின் செயல்படு தன்மையை உணர்த்துவதாக இருக்கின்றது. இது போல 'மைக்ரோபோன்' என்று சொல்லாக்கம் பெற்றுள்ள 'Microphone' - ஐ ஒலி - மின் மாற்றி' என்று சொல்வதும் சரியானதாகும்.

'Spectrum' என்ற சொல் நிறமாலை, நிற நிரல் என்று பெற்றுள்ளது. உண்மையில் 'Spectrum' நிறத்தோடு அதாவது கட் புலனுக்கு உட்படும் ஒளி அலைகளோடு மட்டும் தொடர்புடையது இல்லை. எனவே வெறும் நிரல் என்று சொல்வதே பொருத்தமாகும் நிறமற்ற அகச்சிவப்புக் கதிர்களுக்குரிய நிரலை, அகச் சிவப்பு நிறமாலை என அழைப்பது எங்ஙனம் சரியாகும்? அகச் சிவப்பு நிரல் என்று மொழியாக்கம் செய்வதே சரியானதாக அமையும்.

எனவே கருவிகளும் சாதனங்களும் தமது செயல்படு தன்மையை விளக்கக் கூடிய வகையிலும், மொழியாக்கம் சரியான கருத்தைப் பிரதிபலிக்கக் கூடிய வகையிலும் கலைச் சொல்லாக்க முயற்சிகள் அமைதல் வேண்டும்.

(ii) வெவ்வேறு துறை சார்ந்த பட்டியல்கள் ஒரே சொல்லுக்கு வெவ்வேறு பொருளைக் கற்பிக்கின்றன. இது கட்டுரை மற்றும் பொழுதுபோக்கு அறிவியல் நூல்எழுதும் ஆசிரியர்களுக்கும் அறிவியல் பயிலும் மாணவர்களுக்கும் குழப்பத்தை ஏற்படுத்தும். எடுத்துக் காட்டாக 'Half life' என்பதை அரை வாழ்வுக் காலம்' அல்லது அரை ஆயுட்காலம்' என்று இயற்பியல் பட்டியலும், 'பாதி சிதைவு நேரம்' என்று வேதியியல் பட்டியலும் கூறுகின்றன. ஒரு குறிப்பிட்ட குறுகிய காலத்தைக் குறிப்பிடுவதற்கு மட்டுமே 'நேரம்' என்ற சொல் பொதுவாகப் பயன்படுத்தப் படுகின்றது. மேலும் 'Half-life' என்பது கதிரியக்க அணுக்களின் தொகுப்பான பொருளுக்கு மட்டுமின்றி அவ்வமைப்பில் உள்ள தனி அணுவுக்கும் கூட கற்பிக்கப்படும் ஒரு பண்பாகும். தனியொரு அணுவின் 'Half life' எனப்படுவது, கதிரியக்கம் காரணமாக அது சிதைவுறாமல் இருக்கக் கூடிய வாய்ப்பு பாதியாகக் குறைய எடுத்துக் கொள்ளும் காலமாகும். பாதிச் சிதைவு என்றால், ஒரு கதிரியக்க அணு பாதியாகச் சிதைவுற எடுத்துக் கொள்ளும் குறுகிய காலம் என்று ஊகிப்பதற்கு இடம் தருகின்றது. எனவே அரை வாழ்வுக் காலம் அல்லது அரை ஆயுட்காலம் என்று மொழியாக்கம் செய்வதே சாலச் சிறந்தது.

'Irreversible' என்பதை இயற்பியலார் நேர்-எதிர் இயக்கமற்ற' என்றும் வேதியியலார் 'மீளா-மீளும் தன்மையுடைய' என்றும் மொழியாக்கம் செய்துள்ளனர். இவ்விரு சொற்களுமே முழுமையாகக் கருத்தை பிரதிபலிக்கக் கூடியதாக இல்லை. Irreversible என்பதை 'ஒருபோக்கு' என்றும். 'reversible என்பதை 'இருபோக்கு' என்றும் கூறுவது எளிமையாகவும் கருத்துக் குழப்பம் இல்லாதவாறும் உள்ளது.

ஒரே சொல் துறைக்கு ஏற்ப பொருள் மாறுபடுவதும் உண்டு. இதையும் நமது பட்டியல்களில் தவறாது சுட்டிக் காட்ட வேண்டும். இல்லையெனில் இருதுறை சார்ந்த மாணவர்களிடையே குழப்பத்தை ஏற்படுத்த இது வழி வகுக்கும். எடுத்துக் காட்டாக 'resonance'

என்பதை 'ஒத்ததிர்வு' என்று இயற்பியலிலும், உடன் இசைவு' என்று வேதியியலிலும், reaction என்பதை 'வினை' என்று வேதியியலிலும், 'எதிர் வினை' என்று இயற்பியலிலும், 'cell' என்பதை 'மின்கலம், என்று இயற்பியலிலும், 'உயிரணு என்று உயிரியலிலும் பொருள் கொள்ளுகின்றார்கள். 'Plasma' என்ற சொல் இயற்பியலிலும் உயிரியலிலும் வெவ்வேறு பொருள் பெறுகின்றது. இத்தகு முரண்பாடுகள் குறைக்கப்படுவதோடு சொற்களின் துறை சான்ற பொருளை (Subject - Oriented) ஒவ்வொரு பட்டியலிலும் சுட்டிக் காட்ட வேண்டும்.

இனப்பெருக்கம் - ஒரு தலைவலி

மக்கள் தொகை கட்டுப்பாட்டினைப் பற்றிஇன்று உலக நாடுகள் அனைத்தும் கவலைப்பட்டுக் கொண்டிருக்கின்றன வளர்ந்து வரும் மக்கட் பெருக்கத்திற்குத் தேவையான உணவும், உடையும், உறையுளும் போதிய அளவு கொடுக்க இயலாது என்பதே இதற்குக் காரணமாகும் கருத்தடை செய்யக்கூடாது என்று கூறுகின்ற கிறித்தவ. இசுலாமிய நாடுகளின் பிடிவாதமான கொள்கையில் கூடநெகிழ்வு ஏற்படத் தொடங்கி விட்டது. ஐக்கிய நாடுகளின் அனைத்துலகக் குழந்தைகள் நிறுவனம் (UNICEF) அண்மையில் வெளியிட்ட ஒரு அறிக்கையின்படி சில நாடுகளின் மக்கட் தொகை கீழே குறிக்கப்பட்டுள்ளது.

சீனா	—	நூறு கோடியினைத் தாண்டி விட்டது.
இந்தியா	—	71 கோடியே 40 லட்சம்
இந்தோனிசியா	—	15 கோடியே 13 லட்சம்
பங்களாதேஷ்	—	9 கோடியே 60 லட்சம்
பாகிஸ்தான்	—	8 கோடியே 38 லட்சம்

அன்னை காவிரி

"தஞ்சை மணவழகன்"

கன்னியர்கள் ஆடிப்பாடக் கன்னி வருகிறாள்;
கண்ணகியின் ஊரைநாடி அன்னைவிரைகிறாள்!
பொன்துகளை மண்ணில்தந்து பொன்னியாகிறாள்;
புனிதகங்கை யமுனைபோல அன்னையாகிறாள்!
(கன்னி...)

அகத்தியரின் கலத்திநின்றும் அன்னை எழுகிறாள்;
ஆர்வமுடன் வளமளிக்க மண்ணில் நுழைகிறாள்!
கல்விளையும் மலைகள்தாண்டிக் கன்னிவருகிறாள்;
நெல்விளையும் கழனிதன்னை நிமிரச்செய்கிறாள்!
(கன்னி)

ஆழமுள்ள நீர்நிலைகள் யாவும் நிறைக்கிறாள்;
அழகுமிகும் கிளைநதியால் நாளும் சிறக்கிறாள்!
சோழமன்னன் அணையில்சற்று ஓய்வு எடுக்கிறாள்;
சோழநாடு சோறுடைக்கும் என்று சொல்கிறாள்!
(கன்னி)

போற்றுகின்ற காவிரியாய்ப் பொங்கிவருகிறாள்;
பூவிரிக்கும் 'கா'விடத்தும் தங்கிவருகிறாள்!
ஏற்றத்தாழ்வு எண்ணிடாது எங்கும்பாய்கிறாள்;
ஏரைப்பூட்டும் உழவர்களின் நெஞ்சம் நிறைகிறாள்!
(கன்னி)

தலபுராணத் தோற்றம்

டாக்டர் சு. வேங்கடராமன், எம். ஏ.
பி.எச்.டி
தமிழ்த் துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்.

முன்னுரை :

தமிழ் இலக்கிய வகைகளுள் தலபுராணமும் ஒன்று. புராணம் எனப் பெயரில் கி.பி. 12ஆம் நூற்றாண்டிலே பெரியபுராணம் தோன்றிய பொழுதிலும் தலபுராணம் என்ற இலக்கியவகை கி.பி. 13 ஆம் நூற்றாண்டில் செல்லிநகர் பெரும்பற்றப் புலியூர் நம்பி (வேம்பத்தூரார்) இயற்றிய திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணத்தை முதலாகக் கொண்டு தோன்றியது. புராண இலக்கியக் காலம் என்று தமிழ் இலக்கிய வரலாற்றில் சிறப்பிக்கப்பெறும் 16ஆம் நூற்றாண்டில் (இக்காலத்தில் மட்டும் 26 தலபுராணங்கள் தோன்றின)[1] தலபுராணம் பல்கிப் பெருகி, 17, 18, 19ஆம் நூற்றாண்டுகளில் தொடர்ந்தன.[2] தலபுராணம் என்று தமிழில் தோன்றி, ஸ்தல மாகாத்மியம் (தலமான்மியம்) என வடமொழி வடிவம் பெற்று, அதுவே தமிழுக்கு மீண்டு வந்து கவிதை வடிவிலும் உரைநடை வடிவிலும் தலமான்மியமானது,

தலபுராணம் ஒரு தலத்து இறைவன் மீது பாடப்படுவது. மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய முச்சிறப்புத்தரும் உடையது என்று சிறப்பித்துப் பாடுவது. இந்திரன் உள்ளிட்ட தேவர்களும் அகத்தியர் உள்ளிட்ட முனிவர்களும் மனிதர்களும் விலங்குகளும் பூசித்து வீடு பெற்றனர் என்று உள்ளமுருகும் வகையில் பாடப் பெறுவது. நாட்டுபுறக் கதைகளை எடுத்துக் கொண்டு நைமிசாரணிய வளத்தில் சனகாதி முனிவர் கேட்க, சூதபுராணிகர் கூறியது அதை அப்படியே நான் கூறுகிறேன் என்று புலவரால் பாடப்படுவது தலபுராணம். தலபுராணம். ஒவ்வொன்றும் தன்னளவில் 'கடையருக்கும் கதி மோட்சம்' என்பதைக் கருவாகக் கொண்டு பாடப் பெற்றது. முற் காலத்தே மக்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்ற இலக்கிய வடிவமாக இது இருந்து வந்துள்ளது.

இலக்கிய வகையின் தோற்றம் அரசியல், பொருளாதார நிலைகளையும் உற்பத்தி உறவு முறைகளையும் கருத்தியற் பாரம்பரியங்களையும் சமய நிலைகளில் ஏற்பட்ட மாற்றங்கள் அவற்றை எதிர்கொள்ளும் தன்மைகள் ஆகியவனற்றையும் உள்ளடக்கிய சமூக அமைப்பை அடித்தளமாகக் கொண்டது. சமுதாயத்தில் ஒரு அங்கமாகிய புலவன் இந்த அடிப்படையில் இலக்கியம் படைக்கிறான் எனும் கருத்தை மையமாகக் கொண்டு தமிழில் தலபுராணத்தின் தோற்றத்திற்கான காரணங்களைச் சமூகவியல் அடிப்படையில் காண முற்படுவது இக்கட்டுரையின் நோக்கம் ஆகும்.

புராணம் :

புராணம் என்பது பழமையானது, புதுமைமிக்கது. 'எது தொன்றுதொட்டு இருந்து வருகிறதோ அது புராணம்' என்று வாயுபுராணம் கூறும். வடநூலோர் புராணங்களை மகாபுராணம் (18), உபபுராணம் (18), அதிபுராணம் (18) எனப் பிரிப்பர். தமிழில் புராணம் என்ற சொல்லாட்சி, பண்டு தொட்டு இருந்தபோதிலும் எப்போது தொடங்கியது என்று கூற இயன்றிலது. சாந்தி புராணம் (8-ஆம் நூற்றாண்டு), புராண சாகரம் (காலம் 9-ஆம் நூற்றாண்டு) இரண்டும் பற்றி முறையே புறத்திரட்டு, யாப்பருங்கலவிருத்தி ஆகிய இரண்டும் கூறுகின்றன. தமிழில் பெரியபுராணமே புராணம் என்ற பெயரில் முதலில் எழுந்தது. பிற்காலத்தில் சாதிப் பெயரில் சாதிப் பெருமை கூறும் செங்குந்தர் புராணம், விசுவகருமர் புராணம், சீர்கருணர் புராணம், குலாலர் புராணம், சான்றோர் புராணம் என்பனவும் தோன்றின.

தமிழில் தோன்றிய புராண நூற்களை 1) அடியார் வரலாறு கூறும் புராணம் 2) தல புராணம், 3) இதிகாசம், மகாபுராணம் ஆகிய வடமொழி நூற்கள் தமிழில் மொழி பெயர்ப்பாகிப் பெயர் பெறுகையில் புராணம் ஆதல், 4) சாதிப் பெருமை கூறும் புராணம் என்று வகைப்படுத்தலாம். அடியார் வரலாறு — பெரியபுராணம், திருவாதவூரடிகள் புராணம்; தல புராணம் — திருவிளையாடற் புராணம், கோயிற்புராணம், திருமழுவாடி புராணம், தந்திவன புராணம்; இதிகாசம் மகாபுராணம், கந்தபுராணம், பாகவதம், கூர்மபுராணம், இலிங்கபுராணம் என்பன சான்றுகள். தமிழில் தலபுராண இலக்கியம் பெரும்பாலும் தல மகிமை கூறுவனவாகவும்

சிறுபான்மை நதிகளின் பெருமை கூறுவனவாகவும் (காவேரிப் புராணம்) அமைந்தன. தல புராண இலக்கியம் தலச்சிறப்பை இதிகாச, புராண, வரலாற்று அடிப்படைகளுடன் நாட்டுப்புறக் கதைகள், தொன்மக் கதைகள் ஆகியவற்றையும் சேர்த்து விளக்கி நிற்கும். மிக எளிய மக்களுக்கும் புரியலாம்படி கவிதையில் அமைந்து கோயிற் சிறப்பு, மூர்த்தி, தலம, தீர்த்தம் சிறப்பு கூறி, கோயில் விழாக்களையும் ஊர்ப்பெயர் பெருமைகளையும் அவை விளக்கின. வட்டாரவிலக்கியம் என்ற நிலையில் அவை தத்தம் பெருமைகளை மக்களுக்குக் கூறி. மக்கள் இலக்கியமாக இலங்குகின்றன. 'கோயி-லில்லா ஊரில் குடியிருக்க வேண்டா' என்ற பழமொழியை அடிப்-படையாகக் கொண்டு ஒவ்வொரு ஊருக்கும் தலபுராணம் தோன்-றியது. கோயில், வழிபாடு, விழாக்கள், கோயிற்கலைகள் என்ப-வற்றின் களஞ்சியம் தலபுராணம்.

தேவார ஆசிரியர்கள் காலத்தில் இருந்து கோயில்களுக்கான கதைகள் பல்கின. ஒரே கோயிலுக்குப் பல கதைகளும் ஒரு கதைக்குப் பல வடிவமும் ஆக விளங்க, தலபுராண ஆசிரியர்கள் அவற்றைப் பயன்படுத்திக் கொண்டனர். தலபுராண ஆசிரியர்கள் பொதுவாக நூல் வரலாறு கூறுமிடத்தில் வடமொழியில் இன்ன காண்டத்தில் இது உள்ளது அதை நான் விரித்துக் கூறுகிறேன் என்று கூறுவர். ஆனால், வடமொழியில் அது உள்ளதா என்று யாரும் தேடிப் பார்த்ததுமில்லை; பார்த்தால் இருக்கவும் முடியாது. இருந்தா-லல்லவா பார்ப்பதற்கு. சான்றாக ஒன்று கூறலாம். நம்பி திரு-விளையாடற் புராணத்தில், ''ஓதரியவுத்தரமா புராணந் தன்னுள் உண்மைதரு சாரசமுச் சயத்து'' (பாடல் 35 - 1 இந்திரன் பழி-தீர்த்த படலம்). [உத்தரமாபுராணம்—சாரசமுச்சயம் என்பதிலிருந்து திருவிளையாடற்புராணம் மொழி பெயர்க்கப்பட்டது] என்று வரு-கிறது. உத்தரமாபுராணம் இப்போது கிடைக்கவில்லை என்பர் டாக்டர் உ.வே.சா. வடமொழியில் சனற்குமாறு சம்ஹிதையில் சஹயஜா காண்டத்தில் இதன் மூலம் உள்ளது என்று தென் குடித்-திட்டைப் புராணம் கூறும். இத்தகு சஹயஜா காண்டம் என்ற ஒன்றில்லை என்பர் மு. அருணாசலம். அக்காலத்தில் வடமொழியில் இருக்கிறது என்று கூறினால் அதை ஏற்பார்கள் என்பது ஆக்கியோ-னின் எண்ணம். கோயில் தொடர்பான புராணம் ஆனபடியால் யாரும் எளிதில் நம்புவர் என்று இவ்வாறு கூறத் தலைப்பட்டனர். வட்-டார இலக்கியமான தலபுராணத்தை, இந்திரனுள்ளிட்ட தேவரும் அகத்தியனுள்ளிட்ட முனிவரும் வணங்கிச் சாபவிமோசனம் பெற்ற—

தலமென்று கூறி இதிகாச, புராண ஏற்றம் கொடுத்த முயற்சியின் விளைவே வடமொழியில் மூலக்கதை உள்ளது என்று சொல்வதாகும். அந்தணர்கள் மட்டுமன்றி, பிறரும் வடமொழி கற்ற கவிஞர்கள் ஆனபடியால், இவ்வாறு வடமொழியிலிருந்து மூலங்காட்டிப் பாடினர். பின்னால் இவர்களே வடமொழியில் இத்தகு தலபுராணச் செய்திகளை வடமொழிப் புராணங்களில் பாடிச் சேர்ந்தனர். தலபுராணம் கோயில்களில் படிக்கப்பெறுவது பழைய நாட்களில் பெருவழக்காய் இருந்தது. இதனால் எளிய மக்களுக்கு மூர்த்தி, தலம், தீர்த்தம் என்னும் சிறப்புக்களும் சமயத்தின் சிறப்பும் ஒருங்கே கூறப்பட்டன.

தலபுராணங்கள் தமிழில் இருநூற்றைம்பது என்பர் அருணாசலம். இவைகளில் சைவபரமான தலபுராணங்கள் மிகுதி. தமிழில் தலபுராணம் பெரும்பற்றப்புலியூர் நம்பியின் திருவாலவாயுடையார் திருவிளையாடற்புராணத்துடன் தொடங்குகிறது இதனை அடுத்த காலத்தில் (14 ஆம் நூற்றாண்டு) உமாபதி சிவாசாரியார் இயற்றிய கோயிற்புராணம் தொடர்கிறது 15ஆம் நூற்றாண்டில் கடவுள் மாமுனிவர் இயற்றிய திருவாதவூரடிகள் புராணம் தோன்றியபோதிலும் தலபுராணம் எதுவும் இருந்ததாகத் தெரியவில்லை. 16ஆம் நூற்றாண்டில் தலபுராணங்கள் மிகுதியும் தோன்றின.

திருவாலவாயுடையார் திருவிளையாடற்புராணம் முதல் தல புராணம். இது பழைய திருவிளையாடல், வேம்பத்தூரார் திருவிளை யாடல் என வழங்கப்படும். 1753 (விருத்தங்களால்) செய்யுள்களால் ஆன இந்நூல் டாக்டர் உ. வே. சா. வால் பதிப்பிக்கப்பெற்றது. பின்னால் தோன்றிய பரஞ்சோதியார் திருவிளையாடல், கடம்பவன புராணம், சுந்தரபாண்டியம் ஆகிய மதுரைத் தலபுராண நூற்களுக்கு முதனூலாக அமைந்தது பழைய திருவிளையாடற்புராணம் ஆகும். மேலும், 15ஆம் நூற்றாண்டில் கடவுள் மாமுனிவர் பாடிய திருவாத ஊரடிகள் புராணத்திற்கும் இது முதனூலாகும். சுந்தரரின் திருக் தொண்டர் தொகை நம்பியாண்டார் நம்பியின் திருத்தொண்டர் திருவந்தாதி ஆகியவற்றில் இடம் பெறாததால் சேக்கிழாரும் பெரிய புராணத்துள் மணிவாசகர் வரலாற்றைக் கூறவில்லை. மாணிக்க வாசகர் வரலாற்றை முதன்முதலில் வேம்பத்தூரார் திருவிளையாடற் புராணமேகூறுகிறது. ஞானோபதேசஞ்செய்தது, நரிகுதிரையானது, குதிரை நரியானது, மண் சுமந்தது ஆகிய 4 திருவிளையாடல்களில்

கூறப்படுகிறது[4]. பரஞ்சோதியார் தம் திருவிளையாடற்புராணத்திலும் பிற மதுரைத் தல புராணங்களிலும் உத்தரகோசமங்கை, திருப்பெருந்துறைப் புராணங்களிலும் மாணிக்கவாசகர் வரலாறு இடம் பெற்றுள்ளது. இவ்வாறு, பெரும்பற்றப் புலியூர் நம்பி திருவிளையாடற்புராணம் தலபுராணம் என்ற நிலையில், முதலாவதாக விளங்குகிறது.

தேவாரம் பாடிய மூவர்களாலும் திருவாசகம் பாடிய மாணிக்கவாசகராலும் மதுரைத் தலத்துள் நிகழ்ந்ததாகத் திருவிளையாடல் கதைகள் சில கூறப்படுகின்றன. ஆயின், 64 திருவிளையாடல்கள் கூறப்பெறவில்லை. கல்லாடனாரால் பாடப்பெற்ற கல்லாடம் (11 ஆம் நூற்றாண்டு) திருவிளையாடல்கள் சிலவற்றைக் கூறுகிறது. அந்த நூலில் ''கூடற் பதிவரும் ஆடற் பரியோன் எட்டெட்டியற றிய கட்டமர் சடையோன்'' (96 : 13 –14) என்று வந்தபோதிலும், சொக்கனின் திருவிளையாடல்கள் அறுபத்து நான்கையும் அது கூறவில்லை. 64 திருவிளையாடல்களையும முதன்முதலில் பெரும்பற்றப் புலியூர் நம்பியே ''சுருதிநான் மறை தொழுஞ் சொக்கநாயகன் திருவிளையாடல் எட்டெட்டுஞ் செப்பிட'' (திருவால. திருவி. 1) என்று பாடுகிறார் பின்னர்த் தோன்றிய திருவாதவூரடிகள் புராணம, திருநாகைக்காரோணபுராணம் ஆகியவை அறுபத்தி நான்கு திருவிளையாடல்கள் பற்றிப் பேசும். இவ்வாறு முதனூலாக இது இலங்குகிறது.

தோற்றத்திற்குரிய காரணம்: தமிழகத்தில் சோழப் பேரரசின் வீழ்ச்சிக்குப் பிறகு, பொதுவாகப் பெருங்காப்பியங்கள், காப்பியங்கள் ஆகிய நாடு தழுவிய பெரு வீரர்களை மையமிட்ட—நாயகப்படுத்திய—படைப்புக்கள் குறையலாயின; சிற்றிலக்கிய வளர்ச்சி மிகுதியானது,. பிற்காலப் பாண்டியர் எழுச்சி ஏற்பட்டு, அதுவும் கி.பி. 1311 — அளவில் மாறவர்மன் குலசேகர பாண்டியனுடன் தடைப் படுகிறது. தமிழகம் அடிக்கடி போர்களை உள்நாட்டு அளவிலும் 13ஆம் நூற்றாண்டு தொடக்கம் முதல் வேற்றுமொழி, கலாச்சாரம், பண்பாடு. சமய அளவிலான இசுலாமியராலும் – வெளித்தாக்குதல் அளவிலும்—கண்டு வந்தது. கி.பி. 1310-11 அளவில் மாலிக்காபூர் படையெடுப்பால் ராமேஸ்வரம் வரைத் தமிழக ஆலயப் பெருநிதியம் கொள்ளையடிக்கப் பெற்றது. ஆலயப் பெருநிதி மட்டுமின்றி, அந்நியர் படையெடுப்பிலிருந்து கடவுளர் பாதுகாக்கப்படவேண்டி—வைத்த மாநிதியான உற்சவர்கள் கொள்ளையடிக்கப்படாமல் இருப்-

பதற்காக — மதுரைத் தலக் கடவுளரும் அரங்கனும் பிற இடங்-களுக்குச் சென்று வந்தனர். மதுரையும் அதைச் சுற்றியுள்ள பகுதி-களிலும் கி.பி. 1336 முதல் 1377 முடிய சுல்தான்கள் ஆட்சி நடை-பெற்று வந்தது. பேரரசு வீழ்ச்சிக்குப் பிறகு, நாடு அமைதியின்றி இருந்து வந்தது. புலவர்கள் ஆதரிப்பாரின்றி வாடினர். ''பொய்ம்மையாளரைப் பாடாதே எந்தை புகலூர் பாடுமின் புலவீர்-காள் இம்மையே தரும் சோறும் கூரையும் ஏத்தலாம் இடர் கெடும்'' (தேவாரம்,) என்று சுந்தரர் பாடியதற்கு ஏற்ப, புலவர்களின் நாட்டம் இறைவனைப் பாடுதற்கே திரும்பியது. நிலையில்லாத அரசாட்சியில் பிற சமய, பண்பாட்டு, நாகரிக, மொழித் தொடர்பு நீடித்தது. மதுரை சுல்தான்கள் ஆட்சியில் ஆலய வழிபாடுகள் நின்று போயின. இந்தச் சூழலில் மதுரையின் பழ-மையை —பெருமையை—நிலைநாட்டும் நோக்கமும், மதுரைத் தலச் சிறப்பை எடுத்துரைக்கும் நோக்கமும் அடித்தளமாக இருந்தது இயற்கையே.

பிற்காலப் பாண்டிய மன்னர்களின் எழுச்சி ஏற்பட்டு சுந்தர பாண்டியன், வீரபாண்டியன் இருவருக்குள்ளும் ஏற்பட்ட உரிமைப் போரில் பாண்டியராட்சி- தமிழ் மன்னர் ஆட்சி--வீழ்ந்தது. இதன் விளைவாக, மற்றொரு சமயத்தைச் சார்ந்த டில்லி சுல்தான்களின் வருகை ஏற்பட்டது. எனவே, பாண்டிய மன்னர்களுக்கு அவர்தம் பரம்பரைச் சிறப்பை--''தென்னன் சிவனே ஆகும் சிவலோகம் மதுரை ஆகும்'' (திருவாலா. திருவி. திருநகரச் சிறப்பு--பாடல் 17)--இறைவி தடாதகையும் இறைவன் சொக்கனும் மன்னராயிருந்து ஆண்ட பழம்பெருமையை-- எடுத்துரைக்க வேண்டிய தேவை இருந்தது.

புறச்சமய வருகை-- கி.பி. 13 ஆந் நூற்றாண்டு அளவில் இசுலாம் சமயம், கி.பி.16ஆம் நூற்றாண்டு அளவில் கிறித்துவ சமயம்-- இருந்தது. இதனால் வைதிக சமய வாதிகள் தத்தம் சமயப் பெருமைகளை எடுத்துக்கூற, தலபுரானம் படைத்தனர். கி.பி 13 ஆம் நூற்றாண்டில் பெரும்பற்றப்புலியூர் நம்பி திருவிளையாடலில் ஞானசம்பந்தர், சமணர்களுடன் வாதுகளில் வென்று சைவத்தை நிலைநாட்டிய வரலாறு விரிவாகப் பேசப்பட்டது (149 விருத்தங் களால்) இதன் விளைவுதான். சமணசமயம் வீழ இருப்பதை முற்-குறிப்பாகத் நிமித்தங்கள் வழியாகக் காட்டும் வேம்பத்தூரார்,

மறைபொருளாக -குறிப்புப் பொருளாக-- இசுலாமியத்தின் எதிராகச் சைவ எழுச்சியைக் குறிப்பிகிறார். ''பிண்டி வேரற்றுவீழ பிரம்புநேர் பிளப்பக் கையிற் குண்டிகை யுடையப் பாய் முக் குடையுகக் கழுவா யேறக் கண்டனம் கொடுங்கனாத் தோள் கண் இடந்துடிக்கும் ஊர்-வேம் பண்டிகழ் கூகையாந்தை பாழிமேற் குழறுங்கானே'' (திருவால. திருவி. 37, பாடல் 17). மேலும், பின்வந்த திருவாத வூரடிகள் புராணம், திருஉத்தரகோசமங்கை புராணம், திருந்பெருந்துறைப் புராணம் ஆகியவற்றில் மாணிக்கவாசகர் புத்தமதத்தைச்சார்ந்த-வருக்கு எதிராக வாதில் வென்றதை விரிவாகப் பாடுவதும் இதே அடுப்படையில் எனலாம்.

தமிழகத்தின் பிற்காலப் பாண்டியர் வீழ்ச்சியும் தொடர்ந்து மதுரை சுல்தான்கள் ஆட்சியும் சேர, தொடர்ந்து போர்களையே கண்டு வந்தனர் தமிழர். மக்களின் அன்றாட வாழ்க்கை அடியோடு சீர் குலைய, பஞ்சம், பட்டினி தொடர்ந்தது. மக்கள் ஊர்களை விட்டுக் குடிபெயரத் தலைபட்டனர். இதனால், மக்களுக்குத் தத்தம் ஊர்ப்பெருமைகளை தலைச்சிறப்பை -- எடுத்துக்கூற வேண்டிய தேவை ஏற்பட்டது. பஞ்சமும் பட்டினியும்வாட்டிடும் வாழ்வில் மக்-களுக்கு நம்பிக்கை ஊட்டும் பெரிய பணியைத் தலபுராணம் செய்து வந்தது. ஒரு மன்னன் காலத்தில் புகழ்பெற்ற தலைநகரம்--நகரம்--மற்றொரு மன்னனால் அடியோடு தரைமட்டமாக்கப்பட்ட அவலத்-தைத் தமிழக வரலாற்றில் காணலாம். (கி.பி.1219-இல் சோழ நாட்டின் மீது படையெடுத்த முதல் மாறவர்மன் சுந்தரபாண்டியன் அங்கு ஆண்டுவந்த வலிமை குன்றிய மூன்றாம் இராசராசனைத் தோற்கடித்து, உறையூரையும் தஞ்சையையும் அடியோடு அழித்துத் தீயிட்டுக் கொளுத்தினான் என்பர். இவ்வாறு மக்களுக்குப் பழைய நகரங்கள்-- தலங்களின் -பெருமையை எடுத்துக் கூறவேண்டிய தேவை இருந்தது ஒர் அடிப்படை, உள்நாட்டுப் போர்களாலும் அந்நியர் தாக்குதல்களாலும் ஏற்பட்ட அமைதியற்ற சூழலில் மக்களுக்குத் தலப்பெருமைகளை எடுத்துக் கூறி, நம்பிக்கையே இல்லாத வாழ்வில் இறைவன்--சமயம்--தொடர்புபடுத்தி--தலப்-பெருமை கூறும் தலபுராணம் எழுந்தது.

தமிழலகத்தில் இஸ்ாமியர் படையெடுப்பும் மதுரை சுல்தான்கள் ஆட்சியும் ஒருசேர, வைதிகசமயங்கள் வலுவிழக்க, மெல்ல மெல்ல இஸ்லாமிய சமயம் ஆட்சியாளர் மதமாக விளங்க மதமாற்றங்-கள் நிகழத் தலைப்பட்டன. இப்போக்கு விசயநகரப் பேரரசின் தோற்றம் வரை காணப்பட்டது. மதமாற்றம் தொடர்ந்து நிகழ்ந்து

வர, ஆலயங்களில் வழிபாடுகள் தடைப்பட்ட சூழலில் திருவிளை-யாடற்புராணமும் (வேம்பத்தூரார்) தொடர்ந்து கோயிற்புராணமும் தோன்றின. கி.பி. 1542-54 அளவில் நெல்லைக் கடலோரப் பகுதிகளிலும், 1572-95 அளவில் மதுரையிலும் 1586-க்குள் நாகப்-பட்டினம் பகுதியிலும் கிறித்தவ சமயம் பரப்பப்பட்டு, இந்துக்கள் மிகுதியாக மதமாற்றம் செய்விக்கப்பட்டனர். 16ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதிகளில் கிறித்தவ சமய மாற்றப்பணி பெருமளவில் நடை-பெற்றது அதற்குத் தமிழக அரசியல் ஆதிக்கப் போட்டி முதன்மைக் காரணமாக அமைந்தது. இக்கால கட்டத்தில் கமலை ஞானப்பிர-காசரின் திருமழுவாடிப்புராணம், தந்திவனப்புராணம், நிரம்பி அழகிய தேசிகரின் திருப்பங்கிரிப் புராணம், சேது புராணம், திருவையாற்றுப் புராணம், வேணுவனப் புராணம், அளகைச் சம்பந்தரின் திருவாரூர்ப் புராணம், திருவொற்றியூர் ஞானப்-பிரகாசரின், திருவொற்றியூர்ப் புராணம், ஆனக்கூத்தரின் திருக்-காளத்திப் புராணம், திருவையாற்றுப் புராணம், சைவ எல்லப்ப நாவலரின் அருணாசல புராணம், திருவிரிஞ்சைப் புராணம் தீர்த்த-கிரி புராணம், திருவெண்காட்டுப் புராணம், செங்காட்டங்குடிப்-புராணம், செவ்வந்திப் புராணம், புராணத் திருமலைநாதரின் சிதம்-பரப் புராணம், இறைசைப் புராணம், மறைஞானசம்பந்தரின் கமலாயபுராணம் மறைஞானசம்பந்தரின் அருணகிரிப் புராணம், அவதாரியப்ப புலவரின் சுந்தரபாண்டியம் ஆகிய இருபத்தியோரு தலபுராணங்கள் தோன்றின. இவை சைவத்தலபுராணங்கள் இவை அனைத்திலும் சிவபரத்துவம், சிவபுண்ணியம் தருமம் ஆகியவற்-றுடன் நாம செபமும் சிவநிந்தனையின் தீமையும் விரிவாகப் பேசப்-பட்டன. சமய மாற்றத்தின் எதிர்விளைவை இவை இவ்வாறு பாடின,

வேம்பத்தூரார் திருவிளையாடற் புராணத்தில் சமணரை அனல்வாதம், புனல் வாதங்களில் வென்றபின் சமணர்களைச் சைவ சமயத்திற்கு மாற்ற முயல்கிறார் ஞானசம்பந்தர். ''பூசும் இனிய நீற்றைப் போற்றுமின் ஈசன் தாளை மாசற நீரும் நாமும் வாழ-லாங் கூடியென்றார்'' (திருவால. திருளி. 38—செய்யுள் 43). ஆனால், தோற்ற சமணர்கள், ''முன்னையூழ் வினையால் முனிவ-கேள் மடிவ தல்லாற் சொன்னவெஞ் சாப்பல் சீசீ தொடுவமோ'' (மேலது, செய்யுள் 44) என்று கூற, அது கண்டு தொண்டர்களும் நின்றசீர் நெடுமாறனும் சினந்திட சமணர்கள் கழுவேற்றப்-பட்டனர்----'' பொய்செய் பாதகக் குழுவெலாந் தொலைந்திமைப் பொழுதில் வெய்ய நீள்கழு வேறினர் மெலிந்துயிர் பதைப்ப''

(மேலது, செய்யுள் 45). பழைய வரலாற்றுச் செய்தியே ஆன போதிலும், மாற்றுச் சமயத்தாரை அன்பால் தம் சமயத்திற்கு ஈர்த்து, சிவசாதனப் பெருமைகளைக் கூறி, சிவபரத்துவம் நிலை-நாட்ட முயலும் பெரும் பற்றப்புலியூர் நம்பியின் உள்ளம் இந்தத் திருவிளையாடற்புராணம் முழுதிலும் புலனாகிறது. மேலும் சமணர்-களைக் குறிப்பிடும்போது குண்டர், கலகர், துட்டர் என்று குறிப்-பிடுகிறார்.* ''கலக வெஞ்சமண் கையரைக் களைந்திடாது ஒழியின் இலகு சைவசித்தாந்தமுன் னிறந்திடும் இறந்தால் அலகில் வேதமும் வேள்வியும் அழிந்திடும் அழிந்தால் உலக வேந்தலும் மாரியும் உலகமும் கெடுமால்'' (திருவால. திருவி 38—செய்யுள் 6) என்று வலியுறுத்துகிறார். இந்தத் திருவிளையாடல் முழுவதிலும் சிவநெறியை — சிவபரத்துவத்தை— வலியுறுத்துகின்றார்.

தமிழகத்தில் பேரரசுகள் காலந்தொட்டே நிலஉடைமை யாளர்களின் மேலாதிக்கப் போக்கின் விளைவுகளுள் ஒன்றாக உழைக்கும் வர்க்கத்தினர் நலன் புறக்கணிக்கப்பட்டு வந்ததை வரலாறு காட்டும். இதனால் உழைப்பை நல்கியவர்கள் தொடர்ந்து துயரில் வாடினர். இங்குள்ள சமூக அமைப்பில் சாதிக்கட்டுப்பாடு-களும் அவர்களை வாட்டின. இதன் விளைவாக, புதிய சமயங்-களின் வருகையின்போது, சமய மாற்றங்களுக்கு ஆட்பட்டவர்கள் மதமாற்றியவர்கள் - பெரும்பாலும் இவர்களாகவே இருந்தனர் என்பர் வரலாற்றாசிரியர்கள். இத்தகைய ஒரு சூழலில்தான் கடை-யருக்கும் இங்கு கதிமோட்சம் என்பதை மையக் கருத்துடன் தல-புராண இலக்கியம் உருவானது. தலபுராணம் அனைத்திலும் தேவர்-களும் முனிவர்களும் விலங்குகளும் மனிதர்களும் வழிபட்டு வீடு பெற்றனர் - உயர்கதி பெற்றனர் - என்று காட்டப் பெறுகிறது. தவறு செய்தவர்கள் தங்கள் தவற்றுக்காக வருந்தி, இறைவனை வழிபட்டால் இறை அருள் கிட்டும் என்று தலபுராண ஆசிரியர் காட்-டினர். அன்புடன் வழிபடும் அடியார்களுக்கு இறைவனே அடியார்க்கு அடியானாக வந்து அருள்செய்வதைக் காட்டினர். இப்போது வாழ்வில் உள்ள துன்பங்களை எல்லாம் வெல்வதற்கு மருந்து இறைவன் என்று காட்டினார். இதற்குமுன் மூவர் தேவாரத்திலும் வாதவூரரின் வாசகத்திலும் கல்லாடத்திலும் சிறுகுறிப்பாகக் காட்டப்பட்ட சிலகதைகளும் புதியதாக வழக்கில் இருந்த கதைகளும் சேர்க்கப்பட்டுத் தலபுராணங்களை உருவாக்கினர். இறைவன் வலைஞனாக வந்தது, பாணர்குலத்தவனாக வந்தது, வளையல்

*''வெறுப்பொடு சமண முண்டர் விதியில் சாக்கியர்கள்'' என்பர் தொண்டரடிப் பொடி ஆழ்வார்.

விற்பவனாக வந்தது, மாணிக்கம் விற்பவனாக வந்தது, கூலி-யாளாக வந்து மண் சுமந்து அடிபட்டது என்ற கதைகளைப் பெரும்பற்றப் புலியூர் நம்பி திருவிளையாடற்புராணம் ஆக்கினார் ''ஒழுக்கமும் தருமந் தவந்தானம் உறவு வாய்மை பொறை மற்றும் விழும்பமுள்ள சூத்திரர் வாழ் மிழலை நாட்டு'' (திருவால. திருவிளை 28, செய்யுள் - 11) என்று வேம்பத்தூரார் சூத்திரர்-களை மிக உயர்த்திப் பேசுவது இங்கு அறியத்தக்கது. நீண்ட காலமாகத் தமக்கு அடங்கி இருந்த உழைக்கும் மக்கள் புதிய சமயங்களுக்குச் சென்று விடாது தடுக்கும் பொருட்டு, இறைவனை எளியவனுக்கு எளியவனாகக் காட்டும் பணிமூலம்-கடையனுக்கும் கதி மோட்சம் என்று பாடுவதன் வழி-சூத்திரர்களைத் தம் கட்டிற்-குள்ளே வைத்திருக்க முயலும் செய்கையே இது என்று கூறலாம்'

இவ்வாறு தலபுராணத்தின் தோற்றம் தமிழக அரசியல், சமூக, பொருளாதார அடிப்படைகளின் பின்னணியில் இருந்தது.

குறிப்புக்கள்

1. அருணாசலம், மு., *தமிழ் இலக்கிய வரலாறு-பதினாறாம் நூற்றாண்டு* - முதல் பாகம், ப. V. திருச்சிற்றம்பலம், காந்தி வித்தியாலயம், 1977.

2. கிருஷ்ணசுவாமி, வே., *தமிழில் தல புராண இலக்கியம்*, பக். 14-17, நாகர்கோவில், ஜெய்குமாரி ஸ்டோர்ஸ். 1971.

3. சாமிநாதையர், உ.வே., (ப.ஆ.) *திருவாலவாயுடையார் திருவிளையாடற்புரணம்* ப.9. சென்னை 1972.

4. அப்பாத்துரை, கா., *தென்னாட்டுப் போர்க்களங்கள்* சென்னை, அலமேலு நிலையம் 1971. (மூன்றாம் பதிப்பு) பக். 272-273

5. Meenakshisundaram, T.P., History of Tamil Literature, P.P. 166-167, Annamalainagar, Annamalai University, 1965.

6. அருணாசலம், மு., *தமிழ் இலக்கிய வரலாறு பதின்மூன்றாம் நூற்றாண்டு* பக் 4-5. திருச்சிற்றம்பலம், காந்தி வித்தியாலயம், 1970.

7. மேற்கோள், கேசவன், கோ., *பள்ளு இலக்கியம் ஒரு சமூகவியல் பார்வை*, பக். 52-54 சிவகங்கை, அகரம், 1981.

பாவையும் பையனும்

பழனி. அரங்கசாமி
மதுரைப் பல்கலைக்கழகம்

கேரளத்தின் சிறந்த கவிஞர் சங்கர குருப் (1901). மலையாளத்தில் எழுதப்பட்டுள்ள அவரது கவிதைகள் ஆங்கிலம், தமிழ் உள்ளிட்ட பிறமொழிகளில் பெயர்க்கப்பட்டுள்ளன.

மண்ணில் மலரும் பூக்கள், விண்ணில் ஒளிரும் தாரகை கொட்டும் அருவி, குளிர்ந்த மழை, ஓடும் மேகங்கள், பாடும் புட்கள் என்றின்ன இயற்கையின் அழகுக் கோலத்தைத் தனது ஓசையிலும், ஒலியிலும் கவிதைக் கயிற்றால் கட்டிப் பிணித்தவர். இயற்கையின் எழில்வண்ணத்தைக் குழைத்த அவரது கவிதைத் தூரிகை நடப்பு உலகத்தின் ஏழ்மையையும், இன்னலையும் கூட விட்டு வைக்கவில்லை. வறட்டுக் காதலும், அர்த்தமற்ற வேதாந்தமும் அவர் கவிதையில் கால் கொள்ளவில்லை என்றே சொல்லலாம். 1956-ல் தாகூரின் கீதாஞ்சலியை மலையாளத்தில் பெயர்த்துள்ளார். விசுவ தரிசனம் எனும் இவரது கவிதைக்கு 1963 -ல் சாகித்ய அகாடாமியின் பரிசு கிடைத்தது. ஞானபீடம் தொடங்கிய 1966 - இல் அதன் பரிசுத் தொகையான ஒரு லட்ச ரூபாய் கவிதைக்குரிய பரிசாகக் கைவரப் பெற்றவர். ஓடக்குழல் எனும் அக்கவிதைத் தொகுதி சிக்காகோ பல்கலைக் கழகத்தில் ஆங்கிலத்தில் பெயர்க்கப்பட்டுள்ளது செங்கதிருகள் எனும் பாடல் தொகுதியிலிருந்து பெயர்த்தெழுதப்பட்ட ஒரு கவிதை இங்கு வெளியிடப்படுகிறது—ஆசிரியர்.

ஏற்றமிகு மாளிகையின் எழில் மணக்கும் தாழ்வாரம்.
பொற்றுகிலைத் துவளவிடும் பூங்கொடி நங்கையவள்
பூனையின் குட்டி ஒன்றைப் பாங்குற அணைத்தே
பிஞ்சு விரலால் வருடிக் கொஞ்சினாள் குணுகினாள்;
வெள்ளி வள்ளத்தின் தெள்ளிய சுவைப்பால்
அள்ளி அள்ளிப் புகட்டும் அழகிய தோர் கை
வாஞ்சை பொங்க வருடி அணைக்கும் பிறிதொரு கை.
பருவம் கொஞ்சும் குமரிக் கோலம்
பார்க்கத் தடையிலை பளிங்குக் கதவுதான்.

எதிர்ப் புறத்து வெளி முற்றத்தை ஏறெடுத்துப்பார்க்கின்
கண்கலங்கு சிறுவன் ஒரு கப்பரையை ஏந்திநின்றான்.
கப்பரையோ அல்ல அது! கசங்கிக் கிடந்த தொன்னைஇலை!
பாதி நாள் திரிந்தலைந்தும் பழஞ்சோற்றுப் பருக்கையில்லை.
வறுமையே உருவாய் வாயடைத்து நின்ற அவன்
எலும்பிலே எஞ்சிநின்ற இழுபறி சதையைக் கூட
வாட்டிநின்ற வறுமையது வாயாரச் சுரண்டியதோ?

வறண்ட தன் நாக்கினை வளைத்து நீட்டியே
காய்ந்த உதட்டினைக் கடுகித் தடவும்
பொடியன் கண்கள் புகைந்து நிற்க
குட்டி கரத்தில் கொஞ்சிக் குடிக்கும்
குட்டி தன்னைக் கூர்ந்து நோக்கினான்.
வெந்து வரும் கண்ணீர் விழிப்படலம் மூடிற்று.
மானுடப் பிறவியேன் என்றெண்ணும் கண்ணீரோ?
காலம் பதில் சொல்லும் என்றெண்ணிக் கவன்றானோ?

சிற்றரவம் கேட்ட பொற்றொடி நங்கை
எழில் கொஞ்சும் திருமுகத்தை இலேசாகத் திருப்பினாள்;
மேடையிலே ஓடிவரும் மெல்லிய பூங்காற்றால்
அல்லிமலர்த் தண்டு ஆடி அசைவது போல்!
கண்ணான குட்டிக்குக் கண்ணேறு பட்டிடுமோ?
அழுமூஞ்சிப் பயலே நீ அகன்று விடு இக்கணமே!
கனன்று விழும் கண்கள் கக்கிற்று நெருப்பினையே!

வாயடைத்துப் போனசிறான் வானத்தைப் பார்க்கின்றான்.
விண்ணைத் துகளாக்கும் வேகமங்கே கால்கொளுமோ!
கடவுளரைப் பொடியாக்கும் கடுங்கோபம் வெளிவருமோ!
யாமறிவோம்! ஒன்று மட்டும்!
சிறுபொடியன் வெளிவிட்ட பெருமூச்சின் வேகத்தில்
நியாயங்கள் நேர்மைகள் நெளிந்து கிடந்தனவே!
பூவுலகத் தர்மங்கள் பொடிப் பொடியாய் நொறுங்கினவே!
பொடிக்கின்ற வெப்பத்தில் வெளி நடந்தான் சிறுவன்.
மலர்ப்படுக்கைக் கண்சிமிட்ட உட்புகுந்தாள் நங்கை.
மதிய உறக்கத்தின் மகத்துவம் பற்றி
அவளன்றி யாரறிவார் அவனி முழுதும்!

மு. வரதராசன் நாவல்களில் சொற்போர் முறை

திருமதி. மா. தையல் நாயகி

திருச்சி

ஆங்கிலச் சொல்லான டயலக்டிக்ஸ் (dialectics) தமிழில் சொற்போர் அல்லது விவாத முறையைக் குறிக்கும். ஒரு கருத்தின் உண்மையைத் திறனாய்வோடு நோக்கும் கலை அல்லது விவாதத்தால் வெளிப்படும் உண்மையான புலனாய்வு என்றும் கூறலாம். பிரித்தானியக் கலைக் களஞ்சியம் (Encyclopaedia Britannica) "டயலக்டிஸ்க்' என்ற சொல், தருக்கவியலில் பொதுவாக இழிந்த பொருளில் பயன்படுத்தப்படுகிறது என்றே குறிப்பிடுகிறது. பொருளற்ற வெறும் சொற் போராட்டத்தைக் குறிக்கவே இச்சொல். தருக்கவியலில் பயன்படுத்தப்படுகிறது.

தற்காலத்தில் டயலக்டிக்ஸ்யை ஒரு உத்தியாகப் பயன்படுத்தும் எழுத்தாளர்களும் திறனாய்வாளர்களும் கூட, அதை விவாதம், தருக்கம் அல்லது சொற்போர் என்ற பொருளிலேயே கையாள்கிறார்கள்.

அரிஸ்ட்டாட்டிலைப் பொருத்த வரையில், சொற்போர் வரலாறு எலையாவின் (Elia) ஜுனோவிலிருந்து (Zeno) தொடங்குகிறது. ஜுனோ எதிரியின் கருத்தைப் பெயரளவில் ஏற்றுக் கொண்டு பின் மெதுவாகத் தன் கருத்தை அவன் மேல் திணிக்கும் வகையில் எதிரியின் கருத்தை மறுத்துரைக்கும் ஒரு உத்தியாக இதைக் கையாண்டார். இந்த உத்தியைத் தான் சோபிஸ்ட்கள் (Sophists) பெரிதும் பயன்படுத்துகிறார்கள். அறநெறி சார்ந்த வரையறைகளை விளக்கிக் காட்ட கேள்வி-பதில் மூலமாக வரும் சொற்போர் முறையை சாக்ரட்டீஸ் ஒரு கலையாகவே கையாண்டார். பிளேட்டோ இதனை வடிவங்கள் அல்லது கருத்துக்களின் புலனாய்வாக மாற்றினார். அரிஸ்டாடிலின் சொற்போர் முறை காரண காரியம் பற்றிப் பொருள் விளக்கும் முறைக்கு எதிரானதாகும். ஹெகலின் (Hegel) முறையில். ஒரு வரையறுக்கப்பட்ட கருத்தின் உட்பொருளை மறைத்து, அது சார்ந்த இரு வேறு முரண்பட்ட வாதங்களை எடுத்துரைத்து, பின்பு ஒரு, ஏற்றுக் கொள்ளத் தக்க முடிவு அல்லது உடன்பாட்டை அடைவது தான் சொற்போர் எனப்படும். சிந்தனையுலகிலும் விஞ்ஞான உலகிலும் மட்டுமல்லாது, இயற்கை, வரலாறு போன்ற துறைகளிலும் இச்சொற்போர் முறை பயன்படுத்தப்படு-

கிறது. ''கருத்து விளக்க நாடகத்தின் (Drama of ideas) தந்தை-யான என்ரிக் இப்சன், ஹெகலின் சொற்போர் முறையால் ஆட்-கொள்ளப்பட்டார். ஹெகலும் இப்சனும் உபயோகித்த இந்த உடன்பாட்டு முற்கோள் - முரண் எதிர் பிற்கோள் - தொகுப்புக் கோள் (thesis antithesis - synthesis) முறையை இப்சனின் கருத்துக-ளால் கவரப்பட்ட ஜார்ஜ் பெர்னாட்ஷாவும் தனது நாடகக் கருக்-களின் வளர்ச்சியில் கையாண்டுள்ளார். இப்சனைப் போலவே ஷாவும் தனது முற்கோள் பிற்கோள்களை சூழ்ந்த நுட்பததோடு கண-டுணர்ந்து விளக்கியிருப்பினும்' தொகுப்புக் கோளை அடைவதிலும் விளக்குவதிலும் அவ்வளவு தெளிவாகவும் வெளிப்படையாகவும் இல்லை. முரண்பாடுகள் தீர்க்கப்படாமலே முடிவற்று நிற்கின்றன. சில நாடகங்கள் அப்படியிருப்பனும் மற்றும் சில, நாடகாசிரியர் சொல்ல விரும்பும் தொகுப்பை எடுத்துரைத்தல் அல்லது கதை சொல்லும் உத்தியின் மூலமே தெரிவிக்கின்றன. பெர்னார்ட்ஷாவைப் பின்பற்றி, தமிழ் நாவலாசிரியரான மு. வரதராசனாரும் தன் நாவல்களில் கருத்துக்களை இச்சொற்போர் முறையிலேயே விரிவு படுத்துறார். ஷாவைப்போலவே, இவரும் சில சமயங்களில் வாத பிரதி வாதங்களுக்கு முடிவு காணா விடினும், பெரும்பான்மையான நாவல்களில் தான் தன் கதை மாந்தர்களின் வாயிலாக எடுத்து ரைக்கும் ஒரு கருத்தின் இருபக்க வாதங்களையும் படித்த பிறகு வாசகர் தானே நாவலாசிரியர் சொல்ல விரும்பும் முடிவை ஊகிக்க வழி வகுக்கிறார்.

சொற்போர் முறையை மு வ. கையாண்டுள்ள முறையை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும் ஷா இப்சனின் தாக்கத்தால் பின பற்றிய இம்முறையை, மு. வ. பெர்னாட்ஷாவின் தாக்கத்தால் எடுத்தாண்டுள்ளார் ஆயினும் நாவல்களில் காணப்படும் குறிப்புக்களைச் சான்றாகக் கொண்டே மு.வ. கையாளும் இவ்வுத்தி ஷாவினுடையதே என்பதை இறுதியாகக் கூற முடியும்

மு வ.வின் *செந்தாமரை, பாவை, பெற்றமனம், கரித்-துண்டு, நெஞ்சில் ஒரு முள், அகல் விளக்கு, வாடாமலர் மண்-குடிசை* முதலிய நாவல்களில் இச்சொற்போர் முறைசெவ்விய முறை-யில் பயன்படுத்தப்பட்டுள்ளது மு. வ. வின் நாவல் கருத்துகளான காதல் (*செந்தாமரை, பாவை*), தாய்பாசம் (*பெற்றமனம்*) வறிய கலை வாழ்வு (*கரித்துண்டு*) மனச்சாட்சியின் உறுத்தல் (*நெஞ்சில்

ஒரு முள்) வாழ்வில் வேகமான உயர்வும் தாழ்வும் (அகல்விளக்கு, வாடா மலர்), உருமறைத்தல் (மண்குடிசை) போன்றவை வெவ்வேறு சந்தர்ப்பங்களில் விவாதம் அல்லது சொற்போருக்கு வழிவகுக்கின்றன.

காதலைப் பொருத்த வரையில், மு. வ. மேல்நாட்டு எழுத்தாளர்களான பெர்னார்ட்ஷா, சாமர்சட் மாம், ஹச். ஜி வெல்ஸ், ரஸ்ஸல் போன்றவர்களின் எண்ணங்களைக் கற்று அறிந்திருப்பினும் அவரது கருத்துக்கினியதும் அவர்தம் ஆய்வுக்காக எடுத்துக் கொண்டதுமான சங்க இலக்கியமும் திருக்குறளும் காட்டும் கற்பு நெறி மாறாக் காதல் வாழ்க்கையே அவர் உள்ளத்தைப் பெரிதும் ஈர்த்தது எனலாம் மேலும் மு. வ. வுக்கு ஒருவனுக்கு ஒருத்தி என்ற தமிழ்ப் பண்பாட்டிலும், குடும்ப வாழ்வின் ஒழுக்கத்திலும் மிகுந்த நம்பிக்கை இருந்தது. மேல் நாட்டுத் தாக்கமும் உள்நாட்டு மரபும். அவரைப் புதுமையும் பழமையும் கலந்த இக்காலச் செயல் முறைக்கு, நடைமுறைக்கு ஒத்த ஒரு கொள்கையை உருவாக்கத் தூண்டின. அதனால் தான் அவர் புதுமை நோக்கும், மரபு வழி ஒழுக்கமும் இரண்டறக் கலந்த ஒரு புதிய காதற் கோட்பாடு வகுக்கிறார். சாந்தி திரு வி.க. போன்ற சமுதாய சீர்திருத்த வாதிகளிடம் கொண்ட ஈடுபாடு காரணமாக, பொதுவுடைமைக் கொள்கையால் ஈர்க்கப்பட்டு, ஏழை பணக்காரர் போராட்டத்தில், ஏழைகளைப் பெரும் பாலும் சார்ந்து பேசுகிறார். அப்போது தான் சமதர்ம சமுதாயம் காண முடியும் என அவர் நினைக்கிறார் அவர் தனது, பிரதிநிதியாகப் படைத்துள்ள அறவழியின் மூலம் கூறுவது போல, மு.வ. எந்த விஷயத்திலும் தீவிரவாதப் போக்குடையவரல்ல. இரு வகை வாழ்க்கை முறைகளை விவாதிக்கும் போதும். வேகமான முன்னேற்றத்தை விட, மிதமான வளர்ச்சியே நிலையானது, ஒழுக்கமானது என்கிறார். கண்மூடி வாழ்வுக்கும் உரிமை வாழ்வுக்கு மிடையே போராட்டம் நிகழ்கையில் ஆரம்ப கால நாவலான பாவையில் உரிமை வாழ்க்கையையே முற்றிலும் சார்ந்து நின்றாலும், வளர்ச்சியுற்ற நிலையில் எழுதப்பட்ட நெஞ்சில் ஒரு முள்ளில், உரிமை வாழ்க்கை விரும்பத்தக்கதாயினும், பெற்றோர், பெரியோருக்கு இணங்கி, அடங்கி நடத்தலும் அவசியம் என்பதை வலியுறுத்துகிறார். ஒரு நல்ல அறவோர் என்ற முறையில், அவர் எப்போதும் தன் நாவல்களில் நல்லவர்களையே புகழ்ந்து பேசுகிறார். தீயவர் தீமை செய்யத் தூண்டும் காரண காரியங்களை ஆராய்ந்

தறிந்த போதிலும். இரு சாராருக்கும் பிளவு ஏற்பட்ட நாளில், நாவலாசிரியர் நல்லவர்களையே போற்றி வந்துள்ளார். *மண்குடிசையிலும்* அவர் மெய்யப்பனையே சார்ந்து நிற்பினும், எந்த ஒரு நல்லவனும் எந்த ஒரு தீயவனையும் தனிப்பட்ட முறையில் திருத்திப் பயன் இல்லை, தனிமனிதனின் மனச்சாட்சி பண்படவேண்டும், மொத்தத்தில் சமுதாயம் திருந்த வேண்டும் என்ற தன் கருத்தைத் தன் பிரதிநிதியான மெய்கண்டார் மூலம் கூறுகிறார். சமயத்துறையில் மு.வ. இராமதீர்த்தர், இராமகிருஷ்ணர், இராமலிங்கர், தாயுமானவர், விவேகானந்தர், மாணிக்க வாசகர் போன்ற சமயப் பெரியோர்களின் வாக்குக்களை விரும்பிக் கற்றதோடு, பாடியும் பரவியும் வாழ்க்கையில் பின்பற்ற முயன்றவர். அவரது, மதம், சமயச் சடங்குகளற்றது; கோயில் வழிபாடும் குங்குமம், மஞ்சளும் துறந்தது; உண்மையான மன ஒருமையும் சுத்தமுமே கடவுளுக்குப் பிடித்தமானவை என்ற புதுமை நோக்குக் கொண்டது. அவரது இந்த ஆலய வழிபாடும் சடங்குகளும் நீக்கிய மெஞ்ஞான வழியே அவர் *மண்குடிசையில்* மெய்கண்டார் மூலம் பரப்ப முயல்வது, சமுதாயத்தின் மூடப் பழக்க வழக்கங்களும், பொருளற்ற சமயச் சடங்களும் ஆசிரியரால் ஆங்காங்கு வெறுத்துச் கட்டப்படுகின்றன. மரபு சார்ந்து வாழவேண்டுமென்ற மனம் ஒரு புறமும் புதுமையை வரவேற்று வாழ்வளிக்க வேண்டும், சமுதாயத்தைத் திருத்தியமைக்க வேண்டும் என்ற ஆர்வம் ஒருபுறமும் பின்னிப் பிணைந்திருப்பதால் மு.வ. வின் கருத்துக்கள் பழமையும் புதுமையும் இணைந்த ஒரு புதிய நெறியில் உருவானவை.

அறிவியல் வினா விடை

— அசாமி

1) தூக்கத்தைப் போக்க மருந்துகள் ஏதேனும் உண்டா?

ஓய்வும் தூக்கமும் இயற்கை அளிக்கும் நன்மருந்துகள் எனலாம். ஓய்வு எடுப்பதனாலும், சில மணி நேரங்கள் தூங்குவதனாலும் இயற்கையாகவே உடலுக்கு ஏற்படும் அசதியினையும் களைப்பினையும் போக்கிக் கொள்ள வேண்டும். அதிக நேரம் தூங்குவது சோம்பலை வளர்க்கும். குறைந்த அளவே தூங்கினால் கண் எரிச்சல் ஏற்படும். உடலின் வெம்மை அதிகரிக்கும். மலச்சிக்கல் உண்டாகும். தேர்வு எழுத விரும்பும் மாணவர்கள் நகர்ப்புறங்களில் 5 மில்லிகிராம் அளவில் விற்கப்படும் வெள்ளை மாத்திரை (methamphetamine) ஒன்றை விழுங்கி நீண்டநேரம் கண் விழித்துப்படிக்கிறார்கள். இரவெல்லாம் கண் விழித்து லாரி ஓட்டுவோரும் இதனை அருந்துவதாகத் தெரிகிறது. இம்மருந்து பசியினை அடக்கி இதயத்தின், இரத்த ஓட்டத்தை விரைவுபடுத்தி மூளைக்கு அசாதாரணமான சுறுசுறுப்பை உண்டுபண்ணக் கூடியது என்பது ஓரளவு உண்மையே என்றாலும், தொடர்ந்து இம்மருந்தினை உட்கொள்ளுவதனால் நரம்புத் தளர்ச்சி ஏற்படுவதோடு மூளை பாதிக்கப்பட்டு விடும். இம்மருந்து விற்பனையைத் தொடக்க நிலையிலே கட்டுப்படுத்துவது அரசினரின் கடமையாகும்.

2) உலகம் உருண்டை என்று சொன்ன வானியல் நிபுணர் யார்? மதவாதிகள் அவருக்குச் செய்த கொடுமை என்ன?

கோபர்னிகஸ் என்பாரே உலகம் உருண்டை என்றும், அது சூரியனைச் சுற்றி வருகிறது என்றும் சொன்னவர். கலிலியோ (1564-1642) எனும் இத்தாலிய வானியல் அறிஞர் அந்த உண்மையினைத் தக்க ஆதாரங்களுடன் உறுதிப்படுத்தினார். வாடிகன் நகரத்தைச் சார்ந்த மதவாதிகள் இதனை எதிர்த்தார்கள். கிறித்தவ வேத நூலின் படி தட்டையான இந்த உலகத்தை ஆண்டவன் படைத்தான் என்பதே அவர்களின் கொள்கை, மதவாதிகளின் கை ஓங்கியிருந்த அந்தக்காலத்தில் தங்களுக்கு எதிரானவர்களை அவர்கள் உயிருடன் கொளுத்தினார்கள். நல்வினை வயத்தான், கலிலியோவுக்கு அப்படி ஒன்றும் கடுமையான மரணதண்டனை விதிக்கவில்லை.

ஒன்பது ஆண்டுகள் வீட்டிலேயே சிறை வைக்கப்பட்டார். அப்போது அவருக்கு வயது 69. கலிலியோவின் வரலாற்றில் குறிக்கத்தகும் ஒரு விந்தையான சம்பவம் இப்போது நடந்துள்ளது. வாடிகன் நகரில் இருக்கும் போப் ஜான்பால் என்னும் கிறித்தவ மதகுரு விஞ்ஞானிகள், வரலாற்று அறிஞர்கள், மதவாதிகள் ஆகியோர் அடங்கி ஒரு குழுவினை 1980-ஆம் ஆண்டு நியமித்தார். அந்தக்குழுவினரின் அறிக்கை அண்மையில் வெளியாகி உள்ளது. ''கலிலியோ ஒரு சிறந்த வான இயல் அறிஞரே; பைபிளில் விஞ்ஞானச் செய்திகள் ஏதும் கிடையாது. உலகப் படைப்பு பற்றி பைபிள் கூறுவதை உண்மையெனத் திரிபுபட உணர்ந்து கலிலியோவுக்கு எதிராக 1633-ஆம் ஆண்டில் வாடிகன் கொடுத்த தண்டனை நியாயமற்றது' என்பதே அந்த அறிக்கை ஆய்வின் அடிப்படையிலான உண்மைக்கு கண் மூடித்தனமான மதக்கொள்கை காலங்கடந்தாவது மதிப்புக் கொடுக்கிறது என்பது மகிழ்ச்சியான செய்தி.

(3) மாரடைப்பு உள்ளவர்கள் முட்டை உண்ணலாமா?

இதயநோய் உள்ளவர்கள் கொழுப்பு, எண்ணெய், பால், வெண்ணை ஆகியவற்றைத் தவிர்த்து மோர், கீரை, பழம், பயறு வகைகளை உண்ணுதல் நல்லது. மருத்துவர்களும் இதைத் தான் சொல்லுகிறார்கள். ஆயின் எல்லாவித சத்துப்பொருள்களும் அடங்கிய முட்டையினை இருதய நோய் உள்ளவர்கள் சாப்பிடலாமா? 'கொலஸ்டிரால் (Cholesterol) எனும் கொழுப்புச் சத்தே இருதய நோய்க்குக் காரணம் என்று சொல்லப்படுகிறது. ஒவ்வொரு முட்டையிலும் இந்த ஊட்டச்சத்து 250 மில்லிகிராம் இருப்பதனால் நெஞ்சு வலிக்கு அஞ்சுகிறவர்கள் முட்டையினையே உண்பதில்லை. இது தவறு. மஞ்சள் கருவில் மட்டுமே இந்த ஊட்டச்சத்து அடங்கியிருப்பதனால், முட்டையின் வெள்ளைப் பகுதியை அச்சமின்றி உண்ணலாம். கூட்டுக்குள்ளேயே வைத்து வளர்க்கப்படும் கோழிகளுக்கு நார், நரம்பு அதிகம் உள்ள தீவனத்தைக் கொடுத்தால் 'கொலஸ்டிரால்' குறைவான முட்டைகளை அவை இடும். அவற்றை யாவரும் உண்ணலாம் என்று விஞ்ஞானிகள் கருதுகின்றனர்.

தொலைக்காட்சியில் நேதாஜி போஸ்

நேதாஜி பற்றிய ஒரு தொலைக்காட்சி (டிவி) இந்த ஆண்டு ஜனவரியில் லண்டனில் வெளியிடப்பட்டது. தனிப்பட்டோரும் டிவி-யைத் தொழிலாக நடத்தும் இங்கிலாந்தில் இதனைத்தயாரித்த கிரானடா டெலிவிஷன் கம்பெனி சில முன்னேற்பாடுகளைச் செய்து கொண்டது நேதாஜி தோற்றுவித்த (INR) தேசீய இராணுவத்தில் பணி புரிந்தோரும், அவரோடு நெருங்கிப் பழகியோரும் ஆகிய பிரேம்சேகல், அபித்காசன், சா நவாசு, மோகன்சிங் ஆகிய நால்-வரையும் தனது செலவில் லண்டனுக்கு அழைத்து போஸ் பற்றிய செய்திகளைக் குறிப்பெடுத்துக் கொண்டது. நேதாஜியின் மருமக-னான சிசிர்கோஷ் கல்கத்தாவிலிருந்து நிறைய செய்திகளை அனுப்பி-யிருந்தார். இப்படி சக்க முன்னேற்பாடுகளுடனும், வரலாற்றுக் குறிப்புகளுடனும் வங்கம் தந்த சிங்கத்தின் வரலாறு அவர் எதிர்த்த வெள்ளையர் மண்ணிலேயே காட்டப்படுவது நமக்கெல்லாம் மகிழ்ச்சி யான செய்திதான். ஆனால் நடப்பு நிலை நேர்மாறாக உள்ளது. தற்போது லண்டனில் காட்டப்படுகின்ற தொலைக்காட்சிப் படத்தில் நேதாஜி வருணிக்கப்படுகின்ற முறையே வேறு—அவர் ஒரு சர்வாதி-காரி, முஸோலியின் சீடர், ஹிட்லரைப் புகழ்ந்தவர், ஜெர்மனி, ஜப்பான், இத்தாலி, ஆகிய நாடுகளின் கைப்பாவை. இந்தக் கருத்து களைக் கூறுவதற்கு யாரைத் தேர்ந்தெடுத்துள்ளார்கள் தெரியுமா? எழுத்துலகில் கோணல் புத்திக்காரராகக் கருதப்படும் நிராத் சௌத்ரி எனும் வங்காளியரைத்தான். இவர் ஆக்ஸ்போர்டில் வசித்துவரு-கிறார். வரலாற்றைச் சிதைத்துள்ள இந்தத் தொலைக்காட்சி ஒரு கொலைக்காட்சியே என்று லண்டனில் உள்ள இந்தியத் தூதுவரகம் கண்டனம் செய்துள்ளது.

உள்ளிருப்புப் போராட்டம் உதவாதென்று எண்ணி வெளியி-லிருந்தே வெள்ளையனை வெருட்டுவேன் என்று வீராவேசம் பூண்டு, காவலரின் கண்ணில் மண்ணைத்தூவி ஒரு மௌல்வியைப் போல் வேடமணிந்து நேதாஜி ஆப்கனிஸ்தான், இரான், இராக் வழியாக 1940-ஆம் ஆண்டு ஜப்பானுக்குத்தப்பிச் சென்றது ஒரு வரலாற்றுப் புகழ் பெற்ற நிகழ்ச்சி. அது மட்டுமல்ல, நேசநாடுகளின் பார்-வைக்குத் தப்பி ஜப்பானிய உதவியோடு நடுக்கடலில் ஒரு நீர்மூழ்கிக் கப்பலில் ஏறி பத்துநாட்களுக்கு மேல் கடலுக்கு அடியில் பயணம் செய்து போஸ் சிங்கப்பூருக்கு வந்தது மயிர்சிலிர்க்க வைக்கும் நிகழ்ச்சி.

இந்த வரலாற்றுச் செய்தியெல்லாம் லண்டன் டிவி - யில் காட்டப் படவில்லை. தொலைக் காட்சியின் கண்ணோட்டத்தில் வெள்ளையர்கள் சுபாஷ்சந்திரபோஸ் பற்றி பெரிதும் கவலைப்பட்டதாகவும் தெரியவில்லை. உண்மையைத் திரித்தும் வரலாற்றைச்சிதைத்தும் வெளிவந்துள்ள இந்தத் தொலைக்காட்சியைப் பற்றி இந்தியப்பாராளுமன்றத்தில் பேசப்பட்டது. சாமர் குகா எனும் உறுப்பினர் இந்தத் தொலைக்காட்சியைப் பிரிட்டிஷார் தடை செய்யுமாறு இந்திய அரசினர் வற்புறுத்த வேண்டும் என்று குறிப்பிட்டார். இதற்கெல்லாம் அந்தத் தொலைக்காட்சியின் தயாரிப்பாளரான டேவிட் போஸ்டன் தரும் பதில் இதுதான்.'' இந்தியர்கள் தாங்கள் விரும்பும் தேசத் தலைவர்களை கடவுளாக்கி விடும் பழக்கம் உடையவர்கள். வரலாற்றுக் கண்ணோட்டத்தோடு தயாரிக்கப்பட்ட இப்படம் அவர்களுக்கு ஏற்புடைத்தாக இருக்காது என்பதில் வியப்பில்லை.''

போர்ப்பரணி பாடிய நேதாஜி வாழ்க்கையின் மிகசிறந்த கூறுகள் இப்படத்தில் மறைக்கப்பட்டிருப்பதை எண்ணும்போது, ஊறிப் போன ஏகாதிபத்திய உணர்வுகள் இன்னும் நீறுபூத்த நெருப்பாகத் தான் உள்ளன என்றே எண்ணவேண்டியுள்ளது.

சிந்தனைக்கு ஒரு சொல்

பந்தங்களால் கட்டுப்பட்டவன் ஜீவன். பந்தங்களிலிருந்து விடுபட்டவன் பக்தன். இறைவனிடம் ஏற்படுகின்ற பிரேமை மனிதனுக்கு எளிதில் வருவதன்று. மனைவி கணவனிடம் காட்டும் ஒரு முகமான அன்பு போன்ற அந்த நிஷ்டா பக்தியை இறைவனிடம் காட்டினால், பக்தி தோன்றும். தூய பக்தி உண்டாவது மிகமிகக் கடினம். பக்தியால், பிராணன், மனம் அனைத்தும் இறைவனிடம் ஒடுங்குகின்றன.

— பகவான் இராமகிருஷ்ணர்

போரின் விளைவுகள்

தனிமனிதன் எப்போது மகிழ்கிறான்? செல்வாக்கு மிக்க வாழ்விலா? திரண்ட செல்வத்திலா? இவையெல்லாம் கூட அவனுக்கு நிறைவான மகிழ்ச்சியைத் தருவதில்லை. மனநிம்மதி ஒன்றே நிறைவான இன்பத்தைத்தரும். அதுபோல் நாடுகள் நிம்மதியாக வாழ வேண்டுமானால், போரின் அறிகுறிகளே இருக்கக்கூடாது போர் வந்தால் என்ன செய்வது என்ற அச்சத்தில் வசதியில்லாத நாடுகள் கூட கோடிக்கணக்கில் செலவு செய்து ஆயுதப் பெருக்கத்தில் முனைந்துள்ளன. தொடர்ந்து ஒரு நாடு போரில் ஈடுபடுமனால, ஆக்கவேலைக்குப் பயன்படுகின்ற மனித முயற்சிகள் அனைத்தும் போர்முனையில் பொசுங்கி விடும். விலைவாசிகள் ஏறிவிடும். நாடு காடாகி விடும். மூன்று ஆண்டுகளுக்கு மேலாக அண்டையிலுள்ள இராக் நாட்டுடன் ஈரான் போரிட்டுக் கொண்டிருக்கிறது. எல்லைத் தகராறும் ஒரு காரணம் என்று சொல்லப்படுகிறது. 84 வயது நிரம்பிய மதகுரு அயத்துல்லா கோமீனியே தலைவர். வேகவைத்த உருளைக்கிழங்கும் பச்சைக் காய்கறியுமே அவரது உணவு. சிறு தவறு செய்தாலும் தலை போய் விடும் என்கிற அளவில் அயத்துல்லாவின் தலைமையில் மிகக் கடுமையான முஸ்லீம சாமியார்களின் ஆட்சி நடைபெறுகிறது. ஆனால் அவர்களாலும் கட்டுப்படுத்த இயலாத அளவுக்கு ஈரானில் விலைவாசிகள் ஏறிக்கொண்டுள்ளன.

1984-மார்ச் முதல் வாரத்தில் ஈரான் நாட்டுத் தலைநகரான டெக்ரானில் சில பொருள்களின் விலைகள் வருமாறு.

	ரூபாய்கள்
1 பவுண்டு ஆட்டிறைச்சி	150
1 பவுண்டு தேநீர்த்தூள்	14(0
சாதாரண முழுக் கால்சட்டை	5000
சிறிய காரின் விலை	4லட்சங்கள்

நியாய விலைக்கடைகளில் தான் முட்டை ஆரஞ்சு, ரொட்டி ஆகியன கிடைக்கின்றன. ரேஷன் கார்டுகள் மசூதிகளில் கொடுக்கப்படுகின்றன. எண்ணிக்கையில் மிகக் குறைந்த அளவே கிடைக்கும் ஆரஞ்சு, முட்டை இவற்றை வாங்குவதற்கு மணிக்கணக்கில் நிற்க வேண்டியுள்ளதாம். இவையெலாம் போரினால் வந்த வினை. "கெட்ட போரிடும் உலகத்தை வேருடன் சாய்ப்போம்" என்று சொல்வதைச் செயலாக்குவோம்.

நூல் மதிப்புரை

(i) நூலின் பெயர் : பண்டிதமணியின் நடைநயம்

ஆசிரியர் : டாக்டர் இரா. மோகன்

வெளியிடு : பண்டிதமணி நூற்றாண்டு விழா வெளியிடு

மேலைச்சிவபுரி.

நூல் விலை ரூ 12 : பக்கங்கள் 150

பண்டித மணி கதிரேசன் செட்டியாரின் நூற்றாண்டு விழா-வினையொட்டி வெளிவந்த நூல்களுள் இதுவும் ஒன்று. எழுபது ஆண்டுகளுக்கு மேல் வாழ்ந்த இத்தமிழறிஞர் தாய்மொழியின் மீது ஆராக்காதல் கொண்டவர். இலக்கிய இலக்கணங்களை ஆழ்ந்து கற்றதோடன்றித் தமது உண்மையறிவையும் மிகுத்துக்காட்டிய நுழைபுலம் மிக்கார். வடமொழியின் பொருணூலாகிய அர்த்த சாத்-திரம், நாடக இலக்கியமாகிய மிருச்ச கடிகம் ஆகியனவற்றைப் பெயர்த் தெழுதி தமிழின் இலக்கிய வளத்தை ஏற்றமுறச் செய்-தவர். அவரது தமிழ் நடையின் செழுமையும் வளமையும் இந்-நூலுள் பகுத்தும் தொகுத்தும் ஆராயப் பெற்றுள்ளன. கருத்துச் செறிவும், சொற் சுருக்கமும், தூய தமிழ் நடையும் நூலுள் வரு-கின்ற மேற்கோள்களில் பரக்கக் காணமுடிகிறது. வெறுஞ்சொல்-லானியன்ற ஆரவாரம் மிக்க பொழிவுகளும், அவற்றைத்தாங்கி வெளிப் போந்துலவும் நாளிதழ்களும் மிக மலிந்துள்ள இற்றை நாட்களில் நல்ல தமிழை படிக்க விழைவார்க்கு இது ஒரு சிறந்த கையேடு. ஆயினும் பண்டிதமணியின் நடையழகு கூறப்புகுந்த நூலாசிரியர் சொல்வன்மை, அணிநலன் ஆகியவற்றோடு பண்டித மணி நயம் கூறும் பகுதிகளையும் எடுத்துக்காட்டுதற்கு ஏராளமான மேற்கோள்களைக் கையாண்டுள்ளார். கூறப்படும் கருத்துகளை வலியுறுத்தற்கும், அணி செய்தற்கும் அரணாக நிற்றற்கும் மேற்-கோள்கள் இன்றியமையாதன. எனினும் நிலத்தில் பாதி கிணறு என்னுமாப் போல், நூலின் பெரும்பகுதியில் தொடர்ந்து ஏராளமான மேற்கோள்கள் காணப்படுகின்றன. நூலாசிரியர் தொகுப்பாசிரியராகக் கருதப்படக் கூடாது அல்லவா? எனவே சிற்சில மேற்கோள்களைக் குறைத்திருக்கலாம் என்று தோன்றுகிறது.

ஒப்பீட்டு நடைநயத்தைப்பற்றி பேசும் போது பண்டிதமணி-யோடு பழகிய சமகால அறிஞர் பல்லோரையும் இந்நூலாசிரியர் நினைவு கூரச் செய்கிறார். நூலின் சிறப்பான பகுதி இது. பக்கம் 19-ல் வடமொழிப்புலமை செவ்வனம் பெற்றிருந்தும், கலப்புத் தமிழின்றிக் கட்டுரைகளை செந்தமிழில் எழுதி வெற்றிபெற்றவர் என்று குறிப்பிட்டு விட்டு, பக்கம்-21 இல் பண்டிதமணி எழுதிய ஒரு நூலில் இருபதுக்கு மேற்பட்ட வடமொழி மேற்கோள்கள் காட்டப்பட்டுள்ளன, வடசொற் கலப்பு மிகுதியாக உள்ளது என்று முன்னுக்குப் பின் முரணாகக் கூறுவதையும், செல்வநாயகத்தின் உரை நடை வரலாறு' எனும் நூலிலிருந்து ஒரே மேற்கோளை இரண்டு இடங்களில் காட்டுவதையும் தவிர்த்திருக்கலாம். 'உதயண' என்னாது 'உதயன' என்று ஐந்து இடங்களில் வருவதை நோக்குமிடத்து, இத்தலைவனின் பெயர் திரிபுபட உணரப்பட்டுள்ளதோ என்று ஐயப்பட வேண்டியுள்ளது. குறுந்தொகைப் பாடலு (25)க்குப் பண்டிதமணி கூறிய நயத்தை எடுத்துக்காட்டியது பாராட்டற்குரியதாகும். பண்டிதமணி எழுதியவையோடன்றி அவற்றோடு தொடர்புடைய பல்வேறு நூல்களையும், அரிதின் முயன்று படித்து அழகிய இச்சிறு நூலைப் படைத்த ஆசிரியரின் முயற்சி போற்றத்தகுந்தது. ஆய்வு நோக்கோடு நூல் எழுதத்தகும் திறமை சான்ற இந்-நூலாசிரியரைத் தெரிந்தெடுத்து பண்டிதமணியின் நடைநயம் பற்றி எழுதச் செய்த நூற்றாண்டு விழாக்குழுவினர் நமது பாராட்டுக்குரி-யவர்கள்-

— அசாமி

(ii) நூல் : திரு.வி.க. ஒரு பல்கலைக்கழகம்

— (கட்டுரைத் தொகுப்பு)

வெளியீடு: மணிவாசகர் நூலகம், சென்னை

விலை: ரூ. 36

பக்கங்கள்—340

தமிழ்த்தென்றல் திரு.வி. கலியாணசுந்தரனாரின் நூற்றாண்டு விழாவையொட்டி, மதுரை காமராசர் பல்கலைக்கழக அஞ்சல்வழிக்

கல்வித் தமிழ்த்துறையின் சார்பில் நடைபெற்ற கருத்தரங்கக் கட்டுரைகளின் தொகுப்பு இந்நூல். திரு.வி.க, வின் சமயக் கோட்பாடு, தேசியம், இலக்கியப்பணி, அரசியல்பணி, பெண்மை பற்றிய கோட்பாடு போன்ற பல்வேறு பொருள்களைப் பற்றிய ஆய்வாக இந்நூல் அமைந்திருக்கின்றது.

திரு.வி.க.வின் சமரச சன்மார்க்கம், முருகனைப் பற்றிய அவரது கருத்து நிலை, தேசியம் பற்றிய திரு.வி.க.வின் சிந்தனைகள், அவர் கையாண்ட பதிப்புமுறை நுட்பங்கள், அவரது சமயப் பொதுமை உணர்வு ஆகியவற்றோடு, அவரது உரை நடைத்திறம், இதழியல் துறையில் அவர் ஆற்றிய அரிய பணிகள் போன்றவை பல்வேறு கட்டுரைகளில் விளக்கமாக எடுத்துக்காட்டப்படுகின்றன. திரு வி.க வின் முன்னுரைகளைப் பற்றிய ஆய்வுக்கட்டுரையும் திரு. வி க.வின் சொற்பொழிவு நூல்கள் பற்றியக் கட்டுரையும் திறம்பட அமைந்துள்ளன திரு.வி.க.வின் கவிதை நூல்களில் காணலாகும் தனித்தன்மைகள் ஒரு கட்டுரையில் விரிவாக ஆராயப்பட்டிருக்கின்றன.

தமிழ்த் தொன்றலாரை உரையாசிரியராகக் காட்டுவதோடு விடுதலை இயக்கம், பொட்டுக்கட்டும் முறை ஒழிப்பு ஆகியவற்றில் அவரது பங்கு இந்நூலுள் ஆராயப்படுகின்றன. அவரது தொழிற்சங்கப் பணிகள் ஒரு கட்டுரையில் எளிமையான வகையில் காட்டப்படுகின்றன.

பெண்ணுரிமைக்குப் பாதுகாவலராக விளங்கிய இத்தமிழ்ப் பெரியாரது நேர்மை, துணிவு, உடலோம்பும் முறை ஆகியன பற்றி நிறையச் செய்திகளை இந்நூல் தருகிறது.

திரு.வி.க.வின் வாழ்க்கையில் இரண்டறக் கலந்து நின்ற அடக்கம், அமைதி, அறிவு, பணிவு, பெருமிதம், இன்பம் முதலான பல்வேறுபட்ட உயர் பண்புகளை ஒரு கட்டுரை வெளிப்படுத்துகிறது. திரு.வி.க.வின் படைப்புக்களில் காணப்படும் மானுட தெய்வ சங்கமம் பற்றி ஆய்கின்ற கட்டுரை, திரு.வி.க.வின் படைப்புக்களில் புதைந்திருக்கும் அவரது உள்ளத்தைக் காணும் அரிய முயற்சியாகும்.

திரு.வி.க வின் தன்னலங்கருதாத தன்மை என்ற கட்டுரை வரன்முறையாக அமைந்திருக்கிறது. திரு.வி.க.வின் வாழ்க்கைக்

குறிப்புகள் பற்றிய கட்டுரை, திரு.வி.க.வின் பண்புகளை விளக்-கும் 'திரு.வி.க. ஒரு பல்கலைக் கழகம்' என்ற கட்டுரை இத்தமிழ்ப் பெரியாரது உயர்ந்த பண்புகளை விளக்குவன.

அமைச்சர் டாக்டர் கா. காளிமுத்து அவர்களின் சிறப்புரை நூலின் தொடக்கப்பகுதியில் அமைந்துள்ளது. கருத்தரங்கத் தலைமை யுரைகள் நூலின் இறுதியில் தொகுத்துக் கொடுக்கப் பட்டுள்ளன.

திரு.வி.க.வைப் பல கோணங்களில் முழுமையும் அறிமுகப்-படுத்தும் பல்வேறு கட்டுரைகளும், எளிய நடையில் கருத்துப்புலப்-பாட்டு நோக்கை மையமாகக் கொண்டு அமைந்துள்ளன. இத்துறை-யில் மேலும் ஆய்வு செய்யத்தூண்டும் பற்பல கட்டுரைகளைத் தாங்கி வெளிவந்துள்ள இந்நூலை தனிப்பட்டோரேயன்றி நூலகங்களும் வாங்குவது திரு.வி.க. நூற்றாண்டில் அவரது நினைவுக்கு நன்றி செலுத்துவதை ஒக்கும்.

— டாக்டர். ம திருமலை

(iii) நூலின் பெயர் : கலைந்த கனவு

ஆசிரியர் : வி சா. பாலசுப்ரமணியன்

வெளியீடு : மீனாட்சி நூல்வெளியீட்டு நிலையம் 60 செ. கோயில் தெரு, ராஜப்பா நகர் தஞ்சாவூர் - 7

இராமகாதையின் இன்றியமையாப் பெண் பாத்திரங்களுள் ஒன்றாகிய சூர்ப்பனகையினைப் பற்றிய இக்கட்டுரைத் தொகுதி ஒரு திறனாய்வு நூலாகும். ஒரு தலைக் காமமே கொண்டவள்-சூர்ப்பனகை என்பதைப் பல்வேறு வகையானும் வலியுறுத்துவது ஒரு கட்டுரை. எண்வகை மெய்ப்பாடுகளில் சூர்ப்பனகையைக் காண்ப-தோடு, வான்மீகத்தோடும் துளசியோடும் இவளை ஒப்பீட்டுப் பார்ப்பது ஆசிரியரின் பன்மொழிப் புலமைமையினையும் ஆய்வு நுணுக்கத்தையும் புலப்படுத்துவதாகும். இந்நூலினை மட்டும் மைய

மாக வைத்து இவ்வஞ்சமகளை எடை போட எண்ணுவோர் அவளை ஒரு பெண்மை நயமில்லாத, காம வெறிகொண்ட சதைப்பிண்டமாகவே கருதுவர். இப்படி ஒரு அசாதாரணமான எண்ணத்தை தோற்றுவிப்பதில் இந்நூலாசிரியர் வெற்றி பெற்று விட்டார் என்று சொல்வதை விடக் கம்பனையும் மீறுகிறார் என்றே கூறலாம் சூர்ப்பனகையைத் தொடர்கதைநாயகி, மோக நாயகி, சாகசவல்லி கள்ளி என்றெல்லாம் இவர் கூறுவதிலிருந்து இவ்வுண்மை புலனாகும். கம்பன் கூட இவ்வளவு கடுமையாக அந்த அந்தணர் பாவையை அறிமுகப்படுத்தவில்லை.

> ''வெவ்விய நெடுங்கண் அயில்வீசி அயல்பாரா
> நவ்வியின் ஒதுங்கி இறைநாணி அயல்நின்றாள்''

என்று மரியாதைக்குரிய பெண்ணாகத்தான் கம்பன் வருணிக்கிறான். பக்கம் 38-39 ஆகியவற்றில் சூர்ப்பனகையின் கூற்றாக வருவனவெல்லாம் நாடகபாணியில் இருக்கிறதேயன்றி கம்பனில் அதற்கு ஆதாரம் இல்லை பவணந்தியார் கூறுவதே போன்று, பின்னோன் வேண்டும் விகற்பம் கூறுவதாகக் கொள்ளினும், கம்பனை விட்டு ஆசிரியர் பிறழ்ந்து போனாரோ என்று எண்ணுதற்கு இடங் கொடுக்கிறது. சூர்ப்பனகைப் படலத்தின் திரண்ட கருத்து பரவலாகக் காணப்படுவதோடு எடுத்துக் கொண்ட தலைப்புகளுக்கேற்பக் கருத்துகள் நல்ல தமிழில் தரப்பட்டுள்ளன. அறியாமை எனும் மாயை அறிவு மயமான ஆண்டவனை அணுக முடியாது என்கின்ற சித்தாந்தக் கருத்தை வஞ்சமகளோடு பொருத்திக் காட்டுவது சிறப்பாக உள்ளது. வேறு பெயரைச் சொல்லாது காமவல்லி என்று தன்னைக் கூறிக் கொள்வதில் உள்ள உட்கிடக்கையினை சுட்டிக்காட்டியிருப்பது மிகவும் பொருத்தம். அடிக்குறிப்புகளோடு தெளிவாக அச்சிடப்பட்டிருக்கும் இத்திறனாய்வு நூல் இராமகாதையினைப் பல்காலும் பயில விரும்புவார்க்கு ஒரு இன்றியமையாத ஒன்றாகும் என்பதில் ஐயமில்லை.

—திரையன்

மதிப்புரைக்கு வந்துள்ள ஏனைய நூல்கள்

1) தமிழ் இடப்பெயராய்வு--டாக்டர் தி. நாச்சிமுத்து
2) பேரீச்சம்பழக்காட்டின் பிரதிநிதிகள்—அ. ஹிலால் முஸ்தபா
3) அமரநீதி — புலவர் அமரன்
4) பாகம் பிரியாள் பிள்ளைத்தமிழ் — சங்கர இராமேசர் (அருட்கவி சானகிநாதன் உரை)
5) கயற்கொடி உயர்த்த காவலன் — சி. தங்கராசன்.

மகாவித்வான் தண்டபாணி தேசிகர் வரலாறு

— பழநி. அரங்கசாமி

தஞ்சாவூர் வரலாறு தழுவிய மாநகரம். தமிழகத்தின் நெற்களஞ்சியம் எனப்பெயரிய வளமிக்க பெருநகரம். அங்கே விண்ணையளாவி நிற்கும் சிலைக்கோயிலும், அதனைச் சுற்றிய ஆழ்ந்த அகழும், உயர்ந்த மதிலும் மாண்டு மறைந்து போன சோழப் பேரரசை நினைவூட்டுகின்றன. பழம்பெரும் கட்டிடங்களும், அரண்மனைகளும், சிவகங்கைப் பூங்காவும் மராட்டியக் குறுநில மன்னர்களையும், அவரையொட்டி வந்த ஆங்கில வல்லரசினையும் சான்று காட்டி நிற்கின்றன. அவை மட்டுமன்றி, சரசுவதி மகால் எனும் பழம்பெரு நூலகம் சரபோஜி மன்னன் விட்டுச் சென்ற ஒரு கலைக் கோயிலாகத் திகழ்ந்து கொண்டுள்ளது. இத்தகு நகரில் சென்ற ஆண்டு தமிழக அரசால் தோற்றுவிக்கப்பட்ட தமிழ்ப் பல்கலைக் கழகம் பல்வேறு அறிஞர்களின் ஆய்வுக் கூடமாகப் பணி புரிந்து வருகிறது. அமெரிக்காவில் ஆய்வுப்பணி முடித்துத் திரும்பவும் ஈங்கு போந்து திருவனந்தையில் மொழி இயல் துறையில் தலைமை யேற்றிருந்த டாக்டர். வி. ஐ. சுப்பிரமணியன் அவர்கள் நாடறிந்த தமிழறிஞர். அவரது தலைமையின் கீழ் இயங்கி வரும் அப்பல்கலைக் கழகத்தில் 1984 - மார்ச்சுத் திங்கள் 24-ஆம் நாள், முதல் முறை-யாக அங்கே ஒரு பட்டமளிப்பு விழா நிகழ்ந்தது. மன்னர்கள் பவனி வந்த திருவோலக்க மண்டபத்தில் பட்டமளிப்பு உடையுடன் மாமேதைகள் பவனி வந்த அழகுக் கோலம் கண்கொள்ளாக் காட்சி-யாக இருந்தது.

எழுபத்தெட்டு வயது நிரம்பிய முதியவர் ஒருவருக்கும் அன்று டாக்டர் பட்டம் அளிக்கப்பட்டது. இறைவன் அருளால் முதுமைக்கேற்ற தளர்வு அவரிடம் காணமுடியவில்லை. பட்டம் பெறுவதும் அவருக்குப் புதுமையான நிகழ்ச்சி இல்லை. பட்டமளிப்பு தமிழ்ப் பல்கலைக்கழகத்துக்கு முதல் நிகழ்ச்சி. பட்டம் பெறுதலோ அவருக்கு ஒரு தொடர் நிகழ்ச்சி. பொன்னாடைகளும், பதக்கங்களும், பட்டமும், பணமுடிப்பும் அவருக்குப் புதியன அல்ல. யார் அவர்? தன்னை விளம்பரப்படுத்திக் கொள்ள விரும்பாத அந்தத் தமிழுருவத்தின் பெயர் மகாவித்வான். சா. தண்டபாணி தேசிகர் என்பதாகும்.

நடுத்தரமான உயரம், இலேசாகக் கறுத்தமேனி. கட்டுக்குடுமி, எட்டுமுழ வெள்ளைவேட்டி. காலர் வைத்த முழுக்கை சட்டை அலுவலக அறைக்குள்ளே நிதானமாக எழுந்தும், நடந்தும் தனது

பணிகளைச் செய்யும் சுறுசுறுப்பு. ஆனால் கண்களுக்குக் கைகொடுக்கிற மூக்குக் கணணாடியோ மிகவும் தடிமனாக இருக்கிறது. அதில் ஒன்றும் வியப்பு இல்லை. அறுபதாண்டுகளுக்கு மேலாக எழுதியும், படித்தும், வருகின்ற கண்களுக்கு அயர்வும தளர்வும் இருக்கும் அன்றோ! ஆயினும் சிறப்பான செய்தி ஒன்று உண்டு. எண்பது வயதை நெருங்கினாலும், இருக்கையில் அமர்ந்து எழுதிக் கொண்டே இருப்பதிலும், பல்வேறு நூல்களை பார்த்துப் பயின்று ஒப்பிடுவதிலும், ஆழ்ந்து சிந்திப்பதிலும் எந்த விதமான சிக்கலும் அவருக்கு இல்லை. நாற்பதிலிருந்து ஐம்பது வரை காயம் நிலைத்தாலே அது பெரும் சாதனை என்று எண்ணுகின்ற இவ்வுலகத்தில் மகாவித்வான் அவர்களின் வாழ்க்கை ரகசியம் யாதாக இருக்க முடியும்? நல்லுணவு, ஓய்வு, உறக்கம் ஆகிய இவைதானோ? இவையெலாம் வரன்முறையாக இருந்தும் கூடப் பலருக்கு இம்மை பொய்த்து விடுகிறதே!

மகாவித்வான் உண்ணுகின்ற காயகல்பம் யாதோ! யான் அறிந்த வரையில் அவர்கள் கொள்ளும் காய்கறி உணவு மிகச்சிறிய அளவே. காலையிலும், மாலையிலும் முதிரக் காய்ச்சிய பாலை நிறைய அருந்துவது உண்டு. எந்த விதமான கோப தாப உணர்ச்சிகளும் இல்லை. ஆத்திரம், பொறாமை, சினம் இவைகளுக்கு அவரிடம் இடம் இல்லை. விசாலமான அறிவோடு, பரந்த உள்ளத்தின் ஆழ்ந்த பெருந்தன்மை. அமைதி ஆகியன இயல்பாகவே அவரிடம் குடி கொண்டுள்ள இயல்புகள். இவையெல்லாவற்றையும் விட அவரது பரிபூரண ஆயுளுக்கு பிறிதோர் காரணமும் எமக்குத் தோற்றுகிறது. நிலைத்த தொண்டு செய்யும் பழுத்த அறிஞரைத் தமிழ் இழந்து விடக்கூடாது என்பது இயற்கையின் எண்ணம். மானுடத்தை நினைத்த நேரத்தில் நிர்மூலமாக்கும் இயற்கை மகாவித்வானிடம் மையல் கொண்டு கிடக்கிறது. அந்த மையல் வளர்க! வாழ்க! என்று நாமும் வாழ்த்துவோம்.

நூற்றுக்கு மேற்பட்ட நூல்களும் பதிப்புரைகளும் எழுதிக் குவித்திருக்கின்ற மகாவித்வான் அவர்களின் இலக்கிய வாழ்வு ஏனையோருக்கு ஒரு வழிகாட்டி. திரிபுரம் எரித்த விரிசடைக் கடவுள் ஆடல் வல்லவனாகக் காட்சி தரும் தில்லைமாநகரமே மகாவித்வான் பிறந்த மண் (15-7-1906). திண்ணைப்பள்ளிக்கூடத்தில் அரிநமோத்து சிந்தம் என்று எழுதிப் பழகும் பாலப் பருவம் முடிந்து விட்டது சடையப்ப தேசிகரும், வாலாம்பாள் ஆச்சியும் தாம் பெற்ற

செல்வனை பச்சையப்பன் உயர்பள்ளியில் சேர்த்தனர். திருவேட்களத்-திலும், தில்லையின் எல்லையிலும் தமக்கிருந்த காடு கழனிகளைப் பார்ப்பதற்கே சட்டையப்பருக்குப் பொழுது சரியாக இருந்தது. அவருக்கு உற்ற நண்பர் ஒருவர் யாழ்ப்பாணத்திலிருந்து தில்லைக்கு வந்திருந்தார். தமது நண்பரின் பையன் தண்டபாணி 'நீசபாஷை' படிக்கக் கூடாது என்று அந்த ஈழத்துப் பெரியவர் வற்புறுத்திக் கொண்டேயிருந்தார். சமயப்பிடிப்பும் ஆன்மீகப் பற்றும் கொண்ட தேசிகருக்கும் அதுவே சரியென்று பட்டது. இதன் விளைவா ஆங்கிலமும், தமிழும் படித்து வந்த தண்டபாணி பச்சையப்பன் பள்ளிக்கு விடை கொடுக்க நேரிட்டது. ஆறுமுக நாவலர் உயர்பள்ளி-யில் அவருக்கு தமிழும் வடமொழியும் பாடமாக அமைந்தன. மகாவித்வான் அவர்களுக்கு வடமொழியில் இலக்கியத்திறன் ஏற்-படுதற்கு இதுவே அடிப்படை.

பள்ளிக்கல்வியினைத் தொடர்ந்து இளைஞர் தண்டபாணி அங்கேயே நாவலர் செந்தமிழ்க் கல்லூரியில் சேர்க்கப்பட்டார். நிர்-வாகக் கோளாறு காரணமாக இத்தமிழ்க் கல்லூரி மூடப்பட்டபோது அங்கு பயின்று கொண்டிருந்த மாணவர்கள் அனைவரும் மேற்றிசை நோக்கினர். அப்போது திருவையாற்றில் காவிரிக் கரையில் அமைந்-திருந்த கீழ்த்திசைக் கல்லூரியே அவர்களுக்குப் புகலிடம் அளித்தது. தண்டபாணியும் இதற்கு விதி விலக்கன்று. தஞ்சை மாவட்ட நிர்-வாகக் குழுவின் அப்போதைய தலைவர் சர்.ஏ டி. பன்னீர்செல்வம் அவர்கள். ஐயாற்றுக் கல்லூரியும் அந்நாட்களில் மாவட்டக் குழுவின் ஆளுகையில் தான் இருந்தது.

தில்லையிலிருந்து வந்த மாணவர்களின் சேர்க்கை திருவை-யாற்றில் தொடங்கியது. தமிழ் வித்வான் வகுப்பில் சேருதற்குப் போட்டி அதிகமாக இருந்தது. வடமொழிப் பிரிவுக்கு மாணவர்கள் விருப்பமாகச் சேர்வது இல்லை. வடமொழியும் பயின்ற தண்டபாணி நிர்வாகிகளின் கண்ணுக்குத் தப்பவில்லை. எனவே மீண்டும் வட-மொழி வகுப்பில் சேர வேண்டியிருந்தது. சாகித்ய சிரோமணிக்-குரிய நூல்களோடு தமிழ் இலக்கியங்களையும் ஐயாற்று அரசர் கல்லூரியில் இவர் படித்து வரலானார். இங்கு ஒரு வேடிக்கை-யான செய்தியினை எடுத்துக் காட்டியாக வேண்டும்.

கல்லூரியினை நடத்துவோர் குறிப்பிட்ட எந்த வகுப்பினையும் மூடி விடக்கூடாது என்ற நன்னோக்கத்தில் தகுதியுள்ள மாணவரை காலியாக இருந்த வடமொழிப் படிப்பில் சேர்த்து விட்டனர். இப்படிச் சேர்க்கப்பட்டடோரில் சிங்காரவேல் சேதிராயரும் ஒருவர். தஞ்சைக்கு அருகில் இளங்காடு எனும் ஒரு கிராமத்தைச் சார்ந்த இவர் தண்டபாணியின் வகுப்புத்தோழர். இவர்கள் இருவரையும் வடமொழி வகுப்பிற்குள் தள்ளி விடுகிறது நிர்வாகம். வகுப்புக்குள்ளேயோ பிராமணரல்லாதார் வடமொழி பயில்வதை ஆசிரியர்கள் விரும்பாத நிலை. இரண்டுங்கெட்ட நிலையில் சிக்கித் தவித்தது மாணவமணிகளே. வருணாசிரம தர்மத்தில் ஊறிப்போன வடமொழி வாணர்கள் நடத்திய கெடுபிடியான போரில் வெற்றி அவர்களுக்குத்தான். வாயினால் பேசிக் கெட்டபெயர் வாங்காமல் வஞ்சகத்தினால் செயலாற்றுவது எல்லோராலும் முடியாதல்லவா! எனவே கள்ளர் மரபைச் சார்ந்த சிங்கார வேலர் தேர்வு எழுத இயலாத இன்னலுக்கு உட்பட்டார். தண்டபாணி தேசிகரோ சாகித்ய சிரோன்மணி படிப்புக்கு மூன்றாம் ஆண்டோடு முற்றுப் புள்ளி வைத்து விட்டு தில்லையை நோக்கித் திரும்பி விட்டார்.

(தொடரும்)

தமிழ் எழுத்தாளர்களின் பார்வைக்கு

கேள்வி : மௌனித்து, சர்ச்சித்து, பயணித்து, தர்க்கித்து புன்னகைத்து என்றெல்லாம் வினையெச்சங்கள் வருமா?

பதில் : தமிழ் மொழியின் இலக்கணப்படி வராது. ஆனால் வாசந்தி, சிவசங்கரி போன்றோரின் கதைகளில் இப்படித் 'தமிழ்' சர்வசாதாரணமாக வரும். ஆங்கிலத்தில் 'பாத்' என்றால் குளியல். அதைத் தமிழில்'' பாத்திக்கிட்டு அல்லது 'பேத்திக்கிட்டு என்று (குளித்துக் கொண்டு என்ற பொருளில்) எழுதினால் எப்படியோ அப்படியே தான் பயணித்து, புன்னகைத்து என்பனவும்.

நன்றி : தீபம் — மார்ச்சு, 1984

நாவலர் பண்டித ந.மு. வேங்கடசாமி நாட்டார்

வாழ்க்கைக்குறிப்பு

பிறப்பு : தஞ்சை மாவட்டம் - நடுக்காவேரி - 4-4-1924.

பெற்றோர் : முத்துச்சாமி நாட்டார் - தைலம்மாள்

இளமைக்காலம் : திண்ணைப்படிப்பு -4- ஆம் வகுப்புக்குச் சமமானது.

உயர்நிலைப்பள்ளியில் சேர்ந்திலர் - தந்தையின் பயிற்றுவிப்பு-குறள் மனப்பாடம்- பாரதம், இராமகாதை, கந்தபுராணம் படிப்பு - 16 - வயதுக்குள் தமிழிலக்கியப் பெரும்புலமை

தேர்வுகள் : 1903 - ஆம் ஆண்டு - மதுரைத்தமிழ்ச் சங்க பண்டிதத் தேர்வுக்கு ஆயத்தம் - பண்டிதத் தேர்வில் முதன்மை - தங்கத் தோடா பரிசு பெறல்.

திருமணம் : இந்திராணி அம்மையார் — 1907.

ஆசிரியப்பணி : பிஷப் ஈபர் பள்ளி, திருச்சி - சில திங்கள் மைக்கேல் உயர்பள்ளி, கோவை-ஓரிரு ஆண்டுகள். எஸ். பி.ஜி. கல்லூரி - திருச்சி - 23 ஆண்டுகள். 1933 - அண்ணாமலைப்பல்கலைக்கழகம் - 1940 -ல் ஓய்வு 1941 - ல் கரந்தைப் புலவர் கல்லூரித் தலைமை- இறுதிக் காலம் வரை.

எழுத்துப்பணி : தமிழ்ப்பொழில், செந்தமிழ்ச் செல்வி, செந்தமிழ் ஆகிய இதழ்களில் கட்டுரைகள்.

இலக்கியத்தொண்டு : (i) அகநானூறு, சிலப்பதிகாரம், மணிமேகலை திருவிளையாடற்புராணம் உரைகண்டமை

(ii) நக்கீரர், பரணர், கபிலர், கண்ணகிவரலாறு, கள்ளர் சரித்திரம், சோழர் வரலாறு ஆகிய நூல்கள்,

(iii) எண்ணற்ற இலக்கியக் கட்டுரைகள்

மாநாடுகள் சொற்பொழிவுகள் : 1932 - திருச்சிமாவட்டத் தமிழ்ப்புலவர் மாநாட்டுத்தலைமை

1939 - இலங்கைப்பயணம் - இலக்கிய, சமயச்சொற்பொழிவு

1910-சென்னை கலித்தொகை மாநாட்டுச் சிறப்புப் பொழிவு

1940 - திருப்பதியில் தமிழிலக்கிய மாநாடு

1940 - நாவலர்பட்டம் - சென்னைமாநிலத்தமிழ் மாநாடு.

விழா பாராட்டுகள்: 1944- அறுபதாம் ஆண்டு நிறைவுவிழா ஏற்பாடுகள் - விழா நிறைவுக்கு முன்னரே (28 - 3 - 44) இயற்கை எய்தல்

1984 - நூற்றாண்டு விழா - கரந்தை தமிழ்ச்சங்கத்தில் — தினமணி (4-4-84), இந்தியன் எக்ஸ்பிரஸ் (12-4-84) ஆகிய நாளிதழ்கள் நாட்டாரைப் பற்றிய சிறப்புக் கட்டுரைகளை வெளியிட்டன.

நூற்றாண்டு விழா 1984 ஏப்ரல் திங்கள்

ந மு வே. நாட்டார் நூற்றாண்டு விழாவிற்கு தஞ்சையில் குழு அமைக்கப்பட்டது பூண்டி பெருநிலக்கிழார் கி துளசி அய்யா வாண்டையார் தலைவராகவும், பேராசிரியர்கள் விருத்தாசலம் கோதண்டபாணி டாக்டர் காத்தையன் ஆகியோர் உதவித்தலைவராகவும் பணி புரிந்தனர்.

12 — 4 — 84 — நடுக்காவேரியில் நாட்டார் சமாதியில்விழா

15 — 4 — 84 — கரந்தைத்தமிழ்ச்சங்கத்தில் விழா

நூற்றாண்டு விழாவினையினையொட்டி நாட்டார் அவர்களைப் பற்றிய தமிழ்க்கட்டுரை குத்தாலம் பாலு அவர்களால் தினமணி (4—4—84) யிலும், பழனி அரங்கசாமி எழுதிய ஆங்கிலக்கட்டுரை (12—4—84) இந்தியன் எக்ஸ்பிரஸ் இதழிலும் வெளியாயின.

(21—4—84) தமிழக அரசின் சார்பில் தமிழவேள்

(22—4—84) உமாமகேஸ்வரம் பிள்ளை ந மு வே.நாட்டார்

அவர்களின் நினைவாக கரத்தைப் பெருமன்றத்தில் விழாக்கள் எடுக்கபபட்டன.

சங்கச் செய்திகள்

மதுரைத் தமிழ்ச்சங்கமும் நற்கூடல் இலக்கியக்கழகமும் இணைந்து 26 - 3 - 84 ஆம் நாள் தமிழ்ச்சங்கக் கலையரங்கில் டாக்டர் திரு. நா செயராமன் எம் ஏ., அவர்கள் தலைமயில் பாராட்டு விழா நடத்தின. செந்தமிழ்க்கல்லூரி மாணவி செல்வி எம்.பஞ்சவர்ணம் மதுரை காமராசர் பல்கலைக்கழக முதுகலைத் தேர்வில் (1983) முதல் மாணவியாகத் தேர்வுபெற்றார். மேலும் இத்தேர்வில் அதிகமதிப்பெண்கள் பெற்ற முதல் பத்து மாணவர்களுள் மூவர் செந்தமிழ்க் கல்லூரியைச் சேர்ந்தவர்களாவர். செல்வி எம். பஞ்சவர்ணத்திற்கு பல்கலைக்கழகம் தங்க மெடல் பரிசளித்துள்ளது. பாராட்டு விழாவில் செந்தமிழ்க்கல்லூரி தாளாளர் திரு. மா. தனுக்கோடி பாண்டியன் பி.ஏ., பி.எல்., அவர்கள் செல்வி எம். பஞ்சவர்ணத்திற்கு தங்கத் தோடா வழங்கி உரையாற்றும்போது தமிழ்ச்சங்கப் பண்டிதத் தேர்வில் முதன்மை பெற்றவருக்கு வள்ளல் பாண்டித்துரைத்தேவர் அவர்கள் அற்றை நாட்களில் தங்கத் தோடா வழங்கி பாராட்டியமையினை நினைவுறுத்தினார்.

செந்தமிழ்க் கல்லூரியில் பதினோரு ஆண்டுகளாகப்பணியாற்றி வரும் பேராசிரியர் திரு. க. சின்னப்பா எம்.ஏ. டிப்.லிங்., அவர்கள் மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் ''திருமங்கலம் வட்டாரச்சிறு தெய்வம்'' என்ற தலைப்பில் ஆய்வுநூல் தந்து டாக்டர் பட்டம் பெற்றமைக்காக தமிழ்ச்சங்கச் செயலாளர் திரு.டி.பி.எம். பெரியசுவாமி அவர்கள் பொன்னாடை அணிவித்துப்புகழுரை வழங்கினார்கள். நற்கூடல் இலக்கியக்கழகம் நடத்திய கவிதை இயற்றல் போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்கு கல்லூரி குழுத்தலைவர் திரு.மா. சங்கர பாண்டியன், பி.ஏ.,பி.எல்., அவர்கள் பரிசளித்தார்கள்,

டாக்டர் பட்டம் பெற்ற பேராசிரியர், தமிழ்ப்பல்கலைக்கழக ஆட்சிமன்றத்திற்கு வெற்றி பெற்ற சங்கச்செயலர் திரு டி பி எம். பெரியசுவாமி, அண்ணாமலைப்பல்கலைக்கழக செனட்டிற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட கல்லூரித்தாளாளர் திரு மா. தனுக்கோடிபாண்டியன் கல்லூரிக்குழுத்தலைவர் திரு.மா. சங்கரபாண்டியன், ஆகிய அனைவருக்கும் செந்தமிழ்க்கல்லூரி அலுவலர்களின் சார்பில் மேலாளர் திரு. எஸ். கருப்பையா பொன்னாடை அணிவித்தார்.

ii) தமிழ்ச்சங்க வளர்ச்சிக்கும், செந்தமிழ்க் கல்லூரியின் உயர்வுக்கும் அரும்பணியாற்றிய புலவர். ச. சாம்பசிவனார் அவர்கள் அந்நாளில் சங்கம் நடத்திய பாலபண்டிதத் தேர்வில் முதற் பரிசு பெற்றவர். பண்டிதத் தேர்விலும் வெற்றி பெற்று படிப்படியாக முன்னேறி தற்போது மதுரைப் பல்கலைக்கழக அஞ்சல் வழிக் கல்வித்துறையில் பேராசிரியராகப் பணி புரிந்து வருகின்றார். சங்கச் செயலாளராக இருந்த நாவலர் சோமசுந்தர பாரதியார் மறைந்த பின், அப்பெருந்தகை பயன்படுத்திய நூல்களை அன்னார் குடும்பத்தாரிடமிருந்து பெற்று தமிழ்ச்சங்கத்துப் பாண்டியன் புத்தகசாலைக்கு அன்பளிப்பாகக் கொடுத்ததோடன்றி 'செந்தமிழ்' இதழின் பொறுப்பாசிரியராகவும் சில காலம் பணி புரிந்தவர். நாவலர் பாரதியார் எழுதிய பல அரிய நூல்களைப் பதிப்பித்தவர். அறுபதுக்கு மேற்பட்ட நூல்களும், நூற்றுக்கு மேற்பட்ட ஆராய்ச்சிக் கட்டுரைகளும் எழுதிய சாம்பசிவனார், இந்த ஆண்டு *நாவலர் சோமசுந்தர பாரதியாரின் தமிழ் இலக்கியப்பணி* எனும் பொருள் பற்றி ஆய்வு செய்து மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தின் டாக்டர் (Ph.D) பட்டமும் பெற்றுள்ளார் இறையருளால் நலம் பல பெற்று மேலும் தமிழ்த் தொண்டு செய்து வருதற்கு நமது வாழ்த்துகள்.

அந்தமானில் தமிழர்கள்

கேள்வி : அந்தமானில் தமிழர்கள் இருக்கிறார்களா? அவர்களது வாழ்வு நிலை என்ன?

பதில் : தீவில் தமிழர்கள் 35 ஆயிரம் பேர் இருக்கிறார்கள். தமிழகத்துக் கட்சிகள், தமிழ்த் திரைப்பட அரங்குகள், மற்றும் கோவில்கள். சாதிச் சங்கங்கள், சாதியின் பெயரால் மண்டகப் படிகள் ... சாராயக் கடைகளும் இங்கே உண்டு. தமிழர்களிடம் இங்கு இல்லாதது ஒற்றுமை ஒன்றே,

கேள்வி : இலங்கைத் தமிழரை அந்தமானில் குடியமர்த்துவது பற்றி இங்கே பத்திரிகைகளில் செய்தி வந்ததே!

பதில் : தீவின் உண்மை நிலைகளைப் புரியாமல் எழுதப்பட்டவைகள் அலைகள். இங்கே இலங்கைத் தமிழரை குடியேற்றும் வாய்ப்பு வசதிகள் கிடையாது.

— நன்றி : அந்தமான் முரசு
17—3—84.



திரு. மா. சங்கரபாண்டியன் உரையாற்றுதல்



திரு மா. தனுக்கோடி பாண்டியன் உரை நிகழ்த்துதல்

சங்கச் செயலாளர் டாக்டர். சின்னப்பாவுக்குப் பொன்னாடை போர்த்துதல்.



கல்லூரித் தாளாளரிடம் தங்கத்தோடா பெறும் செல்வி.

8122/122

STATEMENT ABOUT OWNERSHIP AND OTHER PARTICULARS ABOUT SENTAMIL

1.	Place of Publication	: Madurai
2.	Periodicity of Publication	: Quarterly
3.	Printer's Name	: S. Singaram
4.	Nationality	: Indian
5.	Address	: 4 B, Venkatapathy Iyengar Street., Madurai-625 009
6.	Publisher's Name	: T.P.M. Periyaswamy
7.	Nationality	: Indian
8.	Address	: 54, Tamil Sangam Road, Madurai-11.
9.	Editor's Name	: T.P.M. Periyaswamy
10.	Nationality	: Indian
11.	Address	: 54. Tamil Sangam Road, Madurai-11.
12.	Names and addresses of individuals who won the newspaper and partners or shareholders holding more than one percent of the total capital	: Madurai Tamil Sangam, 54, Tamil Sangam Road, Madurai — 625 001

I, T.P.M. Periaswamy, hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

T.P.M PERIASWAMI

DATED : 30-3-1984 SIGNATURE OF PUBLISHER

Maniam Press, Madurai-9. Copies: 1000